உ

ஸ்ரீராமநாத ஸஹாயம்.

# ஸ்ரீ ஸேது ஸம்ஸ்தானம்.

பிரமாதீச ஞு

# மஹா நவராத்திரி

## மஹோத்ஸவத்தில்

வித்துவான்கள்

பாடியபாடல்கள்.

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலைப்

பதிப்பு.

1913 ஞு.

உ

ஸ்ரீராமநாத ஸஹாயம்.

# முகவுரை.

——(:o:)——

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தின் தென்கோடியில் விளங்கும் ஸ்ரீ சேதுஸம்ஸ்தானத்தின் பழைமை பெருமைகளைப்பற்றி நாம் புதிதாகக் கூறத்தக்க தொன்றுமில்லை. இச்சம்ஸ்தானத்தின் தலைநகரான இராமநாதபுரத்தில் ஆண்டுதோறும் விசேஷமாகக் கொண்டாடப்பெறும் நவராத்திரி மகோத்ஸவமானது, பிரமாதீச வருஷத்தும் மிக்க விமரிசையுடன் நடைபெற்றது. சேதுபதிகளரண்மனையில் திருக்கோயில் கொண்டருளும் ஸ்ரீ ராஜராஜேசுவரி யம்பிகையின் நைமித்திக பூஜா விசேஷங்களும், ஒவ்வொருநாட் பகலிலும் இரவிலும் சேதுவேந்தர் சந்நாகத்துடன் விஜயஞ் செய்து அம்பிகையை அடிபணிந்து சென்றதும் அற்புத காட்சியாயிருந்தன. இம்மகோத்ஸவத்தின் பொருட்டு வேதம் வல்ல வைதிகரும் சம்ஸ்கிருத வித்வான்களும் தமிழ்ப்பண்டிதர்களும் சங்கீதம் வல்லாரும் மற்றும்பல துறையினும் தேர்ச்சியுற்றவரும் வழக்கம்போலவே வந்து கூடினர். பிராமணர் முதலிய எல்லா ஜாதியார்க்கும் உண்டிகள் அளித்து உபசரிக்கப்பட்டன. ஊர்முழுதும் இம்மகோத்ஸவத்தால் உற்சாகம் நிரம்பியிருந்தது.

ஒவ்வொருநாளும் சேதுவேந்தர் திருமுன் சங்கீத வித்வான்களிற் சிறந்தவர்கள், தத்தம் அரிய சாமர்த்தியங்களைக் காட்டித் தக்கபடி பரிசுகள் அளிக்கப்பெற்றுச் சென்றனர். இரவில், ஒவ்வொரு திருக்கோலத்தோடும் எழுந்தருளும் அம்பிகையுடன் சேது

பதி மஹாராஜா அவர்கள் சந்நாக ஸகிதம் ஸ்ரீராமலிங்க விலாசத்துக்கு விஜயஞ் செய்து, ஆங்கு நடக்கும் பரதநாட்டியாதிகளைக் கண்டு மகிழ்ந்து மீளுங்காட்சி மாட்சிமை வாய்ந்தது. இவ்வாறு, சம்ஸ்தான வாசிகளது கண்ணுமனமுங் களிப்பெய்தும்படி, அம்பிகை தெரிசனமும் அரச வைபவங்களும் நாடோறும் நடந்தேறின. சரஸ்வதி பூஜாதினத்தன்று இரவு மாட்சிதங்கிய சேது வேந்தர் அவர்கள், வடமொழி தென்மொழி சங்கீத முதலியவற்றில் வல்ல வித்வான்கள் ஒரு புடை அலங்காரமாக விளங்கவும், கனம் திவான் அவர்கள் அஸிஸ்டண்டு திவான் முதலியவர்களும், பிரபுக்களும் பிரமுகர்களும் பிற உத்யோகஸ்தர்களும் மறுபுடை விளங்கவும், அத்தாணியில் பேரோலக்கமாக வீற்றிருந்து, வித்வான்கட்கெல்லாம் அவ்வவர் தகுதிக்கேற்றவாறு, தோடாக்கள், பதக்கங்கள், பீதாம்பரங்கள், திரவியங்கள் அளித்தும், ஏனையோரை அவ்வவர் தகுதிப்படி கௌரவித்தும், உபசரித்த வைபவம் இங்கெழுதுந் தரத்ததன்று. சென்றமுறை தமிழ் வித்வத் சிகாமணியாகிய மஹாமஹோபாத்யாயர்: ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதஐயரவர்கள் கௌரவிக்கப் பெற்றதுபோல, இம்முறை வடமொழிக் கலைகளிலும் பகவத் விஷயங்களிலும் வல்ல மஹா பண்டிதரான ஸ்ரீ உப. வே. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமிகள், மஹா சமுகத்தால், இரட்டைத் தோடாக்களிட்டுக் கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத் தக்கது. இம்மஹா சபை கலைவதன்முன், இவ்வாண்டில் சம்ஸ்தானம் அம்பிகையின் திருவருளால் அடைந்த புரோவிர்த்தியையும், பிற விசேஷங்களையும் பற்றிய ராஜபத்திர மொன்று படிக்கப்பெற்று மகிழ்வூட்டியது. இவ்வாறாக, சரஸ்வதி பூஜாதினமானது, உண்மையில் சரஸ்வதி பிரத்யக்ஷமான திருநாளாகவே விளங்கிய தெனலாம். இங்ஙனம் வித்வான்களைக் கூட்டி அத்திருநாளை அலங்கரித்தமாட்சி பிரகிருத மகாராஜா அவர்கட்கே உரியதாம்.

"புலவரைப் போற்றுவ தேகலை வாணிக்குப் பூசையென்று
நிலவரைப் பாள்கின்ற வேந்தரி னின்போ னினைந்தவர்யார்?
சலவரைப் போற்றுதல் செய்யாம லென்றுந் தலைசிறந்த
நலவரைப் போற்றிய சிராஜ ராஜ நரேந்திரனே."

என்று பாடிய சம்ஸ்தான வித்வசிகாமணியின் வாக்கு உண்மைப் புகழ்ச்சி என்னத் தடையில்லை. தமிழ் வளர்க்கும் தலைவரின்றிப் புலவர் தவிக்கும் இக் காலத்தில், சேதுசம்ஸ்தானாதிபதிகளே முன்னின்று இங்ஙனம் தமிழ் வளர்ச்சி செய்து வருவது தென்னாட்டின் பாக்கியமேயன்றோ? இதுநிற்க.

சரஸ்வதிபூசையின் மறுநாள் விஜயதசமியன்று மாலை அம்பிடும் பவனிக்காட்சி ஆரம்பமாயிற்று. அக்காட்சிக் கென்று நான்கு திசைகளினின்று வந்துகூடிய ஜனங்கள் அளவிலர். இராமநாதபுரத்திற் றிருக்கோயில்கொண்ட மூர்த்திகளெல்லாம் முன் செல்லவும், அடுத்து ஸ்வர்ணகசிதமான சிம்மவாகனத்தே அம்பிகை எழுந்தருளவும், அதன்பின் சேதுபதி வேந்தரவர்கள், ஐராவதம் போல் அலங்கரிக்கப்பட்ட பட்டத் தியானையில் ஆரோகணித்துச் சகல ராஜ வைபவங்களுடனும் மஹாநோன்புப் பொட்டலிற்குப் பவனிசென்றதுமாகிய காட்சிப் பெருமையை இங்கு முழுதும் வருணிக்கமுடியாது. பழைய நூல்களால் அரசர் வைபவங்களாக அறியப்பட்ட சிறப்பனைத்தையும் இவ்வழகிய பவனி ஒருமுகமாகப் பிரத்தியக்ஷமாக்கியது என்னலாம். மஹாராஜா அவர்கள் இங்ஙனம் அம்பிடும் வைபவத்தை முடித்துக்கொண்டு திரும்பி, அரண்மனை இராமலிங்கவிலாசத்தில் விஜயஞ்செய்து, அங்குள்ள சேதுபீடத்தில் வீற்றிருந்து, சம்ஸ்தானத்தைச் சேர்ந்தனவும் சம்ஸ்தானக் கட்டளையுடையவுமான தேவஸ்தானங்களினின்று வந்த தெய்வப் பிரசாதங்களையும், பிராமண ஆசீர்வாதங்களையும், வித்வான்களது

வாழ்த்துக் கவிகளையும் பிரஜைகளது போற்றுதல்களையும் பெற்று விளங்கினார்கள். இங்ஙனமாக, பிரமாதீச வருஷத்து நவராத்திரி மஹோத்ஸவம் பெரு விமரிசையுடன் பரிபூர்த்திபெற்றது.

மாட்சிதங்கிய ஸ்ரீமத். B இராஜராஜேசுவர சேதுபதியவர்களாகிய பிரகிருதமன்னரவர்கள் பட்டமெய்தியது முதல் நடைபெற்று வரும் நவராத்திரி மஹோத்ஸவங்களுள்ளே, இது நான்காவதாகும். இந்நான்கு வருஷங்களுள் சம்ஸ்தானமும் சம்ஸ்தானாதிபதிகளும் அடைந்துள்ள அநுகூலங்கள் பலவற்றுக்கும் அவர்கள் குலதெய்வமாய் விளங்கும் ஸ்ரீ அம்பிகையின் திருவருளே காரணமென்பது சொல்லவும் வேண்டுமோ! அத்திருவருளடியாக, இவ்வாண்டிலும், சம்ஸ்தான நிர்வாகத்துக்கு அறிவுமனுபவமுமிக்க அமைச்சு அமைந்ததும், பெருவிவகாரங்களெல்லாம் தீர்ந்து சமஸ்தானம் தன் பழஞ் சிறப்பெய்தியதும், சேதுகுலஞ் செழித்தோங்குவதும் சமஸ்தானப் பிரஜைகட்கு மட்டுமன்றித் தமிழ்நாடு முழுமைக்கும் மகிழ்ச்சி விளையத்தக்கனவாம். இங்ஙனமே இஷ்ட சித்திகளெல்லாம் மேன்மேலும் இச் சம்ஸ்தானத்துக்கு உண்டாகவும், அறிவு திருவாற்றல்களுடன் சேதுபதி மஹாராஜரவர்கள் நீடுவாழவும் லோகமாதாவாகிய ஸ்ரீ ஜகதம்பிகையின் திருவடித் தாமரைகளைச் சிந்தித்து வந்திப்போமாக.

இங்ஙனம்,

**நா. சுந்தரேசுவர ஐயர்,**

தமிழ் வித்வான், மதுரை.

பிரமாதீச ௵
கார்த்திகை ௴

உ

# பாடினோர் பெயர் அட்டவணை.


பக்கம்.

1. ரா. இராகவையங்காரவர்கள் 1
2. பெரியசாமித்தேவரவர்கள் 5
3. மு. இராகவையங்காரவர்கள் 7
4. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் 9
5. அ. சண்முகம்பிள்ளையவர்கள் 13
6. சர்க்கரை. இராமசாமிப்புலவரவர்கள் ,,
7. ந. சுந்தரேசுவர ஐயரவர்கள் 16
8. எஸ். சாமிநாத ஐயரவர்கள் ,,
9. பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் 17
10. சுந்தரராஜய்யரவர்கள் 18
11. சந்தானமையங்காரவர்கள் 19
12. ஜி. சதாசிவப்பிள்ளையவர்கள் 20
13. திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் 21
14. பொ. மு. முத்தைய பிள்ளையவர்கள் 22
15. வி. திருஞானசம்பந்தக் கவிராயரவர்கள் 23
16. சுந்தரராஜ ஐயங்காரவர்கள் 28
17. சௌந்தர பாரதிகள் 30
18. பி மகாதேவய்யரவர்கள் ,,
19. அஷ்டாவதானி. மகாதேவய்யரவர்கள் 32
20. கோவிந்தய்யரவர்கள் 35

| | | பக்கம். |
|---|---|---|
| 21. | சத்திய வாகீச்வர ஐயரவர்கள் | 36 |
| 22. | சங்கர நாராயண பாரதிகள் | 37 |
| 23. | மு. கிருஷ்ண சர்மா அவர்கள் | ,, |
| 24. | கார்மேகக் கோனர் | 41 |
| 25. | க. சோமசுந்தர பண்டாரமவர்கள் | 45 |
| 26. | மா. சோமாஸ்கந்த பட்டாரகரவர்கள் | 46 |
| 27. | விஜயன் சேர்வைகாரவர்கள் | 47 |
| 28. | சோமசுந்தரம் பிள்ளையவர்கள் | 48 |
| 29. | ஒரியூர். சர்க்கரைப் புலவரவர்கள் | 50 |
| 30. | சிவஞானம் பிள்ளையவர்கள் | 51 |
| 31. | சிவசாமி சேர்வையவர்கள் | 55 |
| 32. | கணபதி சேர்வையவர்கள் | 58 |
| 33. | கோ. ம. சுந்தரஞ் செட்டியாரவர்கள் | 60 |
| 34. | சிதம்பர புன்னைவனநாத முதலியாரவர்கள் | 62 |

வேறு.

சீர்கொண்ட சிற்றம்ப லக்கவிக் கெழில்கொள்மி
திலைப்பட்டி தேர்ந்தளித்தார்
திருந்துதமிழ் வெண்பாப் புலிப்புலவ னுக்கரிய
செவ்வூரை முன்கொடுத்தார்
வார்கொண்ட வூருணிக் கோட்டையினை மாசிலா
மணிப்புலவ னுக்களித்தார்
மதுரகவி காக்கைகுள மறுபத்து நாற்கலமு
மகமையொடு கொளவளித்தார்
பார்கொண்ட புகழமுத கவிராய னுக்கொளிகொள்
பதினுபி ரம்பொனுடனே
பயன்கொள்பொன் னுங்காலை நல்கினர்கள் சர்க்கரைப்
பாவலற் கிந்தவூர்கள்
ஏர்கொண்ட கோட்குடி சிறுகம்பை யூரென்ப
ரீதெலாஞ் சேதுபதிநின்
இனியகுல மரபுளோர் நனியுதவு கொடையாமி
ராசரா சேசுவரனே. (8)

வேறு.

பூரணையும் புட்கலையும் போந்திருபா டேந்துமலர்த்
தாரணையுந் தடம்புயத்துச் சாத்தனையே யேத்துதுமே
காரணையுங் கொடைக்கரத்துக் கவின்ராச ராசமனன்
பாரணையுங் குடைநிழற்கீழ்ப் பல்லுயிரும் வாழ்கவென்றே. (9)

காப்பணைத்த தென்முகவை காவல்புரி சாத்தனுக்குப்
பூப்படைத்துக் கோயிலெலாம் பொன்விளக்கிட் டேத்துதுமே
தேப்படைத்த சேதுபதி குலதீபன் செம்மைமொழி
நாப்படைத்த புகழ்ராச ராசமுகில் வாழ்கவென்றே. (10)

பூத்தொடுத்த பொழின்முகவைப் புரிகாக்குஞ் சாத்தனுக்குக்
கூத்தெடுத்தும் விழாவெடுத்துங் கும்பிட்டுப் பரவுதுமே
காத்தொடுத்த கொடைக்கரத்தைக் கற்றபெருஞ் சொற்றமிழோர்
நாத்தொடுத்துப் புகழ்ராச ராசவேள் வாழ்கவென்றே. (11)

புரியெடுத்த வெயின்முகில்சேர் புகழ்முகவைச் சாத்தனுக்குக்
கரியெடுத்தும் பரியெடுத்துங் கையெடுத்துப் பரவுதுமே
அரியெடுத்த வணைபடைத்த வணிராச ராசமனன்
கிரியெடுத்த நிதிபடைத்துக் கிளைபடைத்து வாழ்கவென்றே. (12)

கருதுவென்றி தருசாத்தன் கழலேத்திப் புலியேற்றைப்
பொருதுவென்ற வெருதுவிட்டுப் பொலிகென்று போற்றுதுமே
விருதுவென்ற வேள்ராச ராசன்நன் விளைபுலநா
டிருதுவென்றி தரச்செழித்தே யெவ்வுயிரும் வாழ்கவென்றே. ()

எங்களிட்ட தெய்வதமா யிபைகூரிச் சாத்தனுக்குப்
பொங்கலிட்டுக் குரவையிட்டுப் பூமரக்கா விட்டுவைத்தேம்
தொங்கலிட்ட முல்லையொடு சொற்றமிழுஞ் சூழ்புபவேள்
நங்களிட்ட நிறைராச ராசமுகில் வாழ்கவென்றே. (14)

வேறு.

புத்தகாதி யங்கைமீது வைத்துவாணி கஞ்சமாது
பொற்பொடாடு கின்றதேவை நகராளன்
புட்பமாலை யுங்கவிசர் பொய்த்திலாத வன்பினோது
பொத்தில்பாட லுங்குலாவு புயதீரன்
மெத்துமேழ்த லம்பராவு சுத்தசேது பந்தநாளும்
மெய்த்தகாவல் கொண்டவீர குலராஜன்
விச்சையார்த னங்கொடாத வச்சையா ரிடம்புகாமல்
வித்தமேத ருந்தயாள குணசீலன்
மொய்த்ததேர்து ரங்கமேய மத்தவார ணம்பல்வீரர்
முற்றுசேனை யுந்திவாகை புனைமாறன்
முத்துராம லிங்கனுரு தற்குநீடு செம்பிநாடு
முட்டிலாது பொங்கவாழ்வு தருவாயே
சித்தமோடி றைஞ்சுதூய பத்தர்பாலு வந்தவாவு
சித்தியாவும் விஞ்சவேகல் கிடுமானே
சிற்சபேசர் பங்கினூடு மொப்பிலாத காளிதேவர்
செப்புநீல கண்டிதேவி பொருதாயே. (15)

வேறு.

தேனே யெனுஞ்செந் தமிழ்வாணர் செய்த செழுந்தவத்திற்
ஹேனே யுதித்தவன் சிராச ராச தயாகரனுங்
கோனே தழைத்து நெடிதூழி வாழக் குறித்தருள்வாய்
மானே வனசங் கரியென்று பேர்பெற்ற மாதுமையே.

குடவாயிற் சாத்த னிதியாயுள் வாழ்வு குறித்தளித்தான்
வடவாயிற் கோயிற் றிருநீல கண்டியும் வாழ்த்தினள்கீழ்த்
தடவாயின் மாரி வரம்பொழிந் தாள்வன சங்கரிதெற்
கிடவாயி லிற்கொடுத் தாள்ராச ராசர்க் கிசைவென்றியே. (16)

ஆகச் செய்யுள் 16.

---

சிவகங்கை வித்துவான்

## பெரியசாமித்தேவரவர்கள் பாடியவை.

பூமாதும் பூமாதும் போற்றி வணங்குகின்ற
கோமா தெனுந்தேவைக் கொற்றவையே—சீமானும்
எங்களி ராஜரா ஜேசுவர னெந்நாளும்
மங்களமாய் வாழவருள் வை. (1)

வேறு.

சீர்மலியு மொன்பதா யைந்தாய் மூன்றாய்த்
திகழொன்றாய் மோனவெழுத் தாகி மன்னி
ஏர்மலியு முறைகடந்த பொருளா யோங்கும்
இராஜரா ஜேச்வரிதா ளேத்து கிற்பார்
தார்மலியு மரசர்தொழுஞ் சேது மன்னர்
தவப்பயனா வவதரித்துச் சார்ந்தோர்க் காக்குங்
கார்மலியுங் கரமுத்து ராம லிங்கக்
கன்னனெனு நன்னயவான் களிக்க வென்றே. (2)

வேறு.

வரையினை யெடுத்தவிரு பதுபுய வரக்கன்விழ
வடிகணை தொடுத்ததிற லுறுமாயனோ
டருமறை யுரைத்தவயன் மகபதி களித்துவின
தடியிணை யெமக்கருள் வருவாகியே

அரனுட னடித்தவுமை பயிரவி யெனத்துதிசெ
யனையுனது கட்கருணை தரவேணுமே
விரைமலர் புயத்திலணி திருபன்முக வைக்கிறைவன்
விரிவுறு விருத்தியுட னனிவாழவே. (3)

வேறு.

அன்னநடை மின்னலிடை சொன்னமலை வன்னமுலை
யரியகா ளகமமுதங்
கன்னன்மொழி துன்னுகணை யன்னகணை வின்னுதற்
கவுரிமா தங்கிபருளால்
நன்னயமொ டன்னையென வுன்னுவிற் பன்னர்புகழ்
ராஜரா ஜேசுவரனும்
மன்னனுறு மின்னுகழ லன்முகவை யின்னிறைவன்
வாழிநீ டூழியாதோ. (4)

பூமருவு தாமப் புயாசல வீதிபுனை
பூமான் சிறந்தசீமான்
புகழ்பரவு புண்ணியன் கண்ணியன் கவிசொலும்
புலவர்மேற் பக்ஷமுடையோன்
காமருவு முயர்செம்பி நாட்டினன் கேதனங்
கனகவரை வரைநாட்டினன்
கலமிலகு வெண்ணெய்முன் னட்டினன் கவியைமீக்
காலத்தி லாதோட்டினன்
தேமருவு பாற்கரன் றன்குலத் தானிசைத்
தேவையெனு நற்றலத்தான்
தெரிவையர்கண் மடலெழுது மழகினன் நசைபெறு
தினம்பொனுத வப்பழகினன்
பாமருவு மெய்முத்து ராமலிங் கச்சேது
பதியுநன் மக்களுடனே
பரவுமிச் செங்கோல் செலுத்தியம் புவியினிற்
பல்லூழி வாழிமாதோ. (5)

வேறு.

வாராரும் வில்லை வனைத்து மணமுடித்துச்
சீராருந் தாரணியாள் தேவனெனுஞ்—சீராம
மூர்த்திபா தந்தொழுது முதலைகை யாண்முகவைப்
பார்த்திபா நாளுஞ்சு பம். (6)

ஆகச் செய்யுள் 22.

---

இராமநாதபுரம் வித்துவான்

## மு. இராகவையங்காரவர்கள் பாடியவை.

### மயங்கிசைக் கோச்சகக்கலிப்பா.

தரவு.

பூமேவு நாடனைத்தும் போற்றுமுயர் புண்ணியஞ்சேர்
மாமேவு செம்பியெனும் வளநாடு வாழ்வெய்த
மாட்சிபெறுஞ் சேதுபதி மன்னர்திரு மரபுமவர்
ஆட்சிதரு செங்கோலு மாற்றலுஞ்சீ ரேழிமிகப்
புண்ணியதா னம்புரிந்தோர் புகற்குரிய பொன்னுலகே
நண்ணியதிங் கெனுமுகவை நன்னகரி னிடைத்திருவின்
பூமனைபோன் மேருவெனும் பொற்குன்றம் போல்விளங்குங்
கோமனையிற் றிருக்கோயில் கொண்டினிது வீற்றிருப்போய்.

விண்ணவர்பூ மழைபொழிய வியனுலகந் தொழுதேத்த
எண்ணரிய மறையவர்க ளிருக்கோதி யேத்தெடுப்பப்
பல்லியமு மின்னிசையும் பார்பரவ நவநிசியின்
மல்லலுறு திருவாணி மலைமகளாய்க் கொலுமேவி
நின்னடியே தொழுதருகி னிற்கின்ற சேதுகுல
மன்னவன்மேற் றிருநோக்கம் வைத்தருளி மன்னுயிர்கட்
குய்வுதரும் பெருங்கருணை யுளங்கொண்டு வளர்முகவைத்
தெய்வதமா கியதேவி திரிபுரசுந்தரியே கேள்.

தாழிசை.

மண்ணரசும் விண்ணரசும் வகித்தவர்தம் வாழ்வனைத்தும்
பெண்ணரசி நின்கடைக்கண் பிறங்கருளின் பேறன்றே.

ஆற்றலெனச் சொல்வதற்கோ ரருந்தெய்வ நீயாகின்
வேற்றொருவர் பெருமையெலாம் நினதன்றி வேறுமோ.

தீதுதரு மகிடனைநீ செருவிலழித் தாயென்பர்
வேதமுத லேயதுநின் வெற்றியெலாம் விளக்குமதோ.

அன்னைமுனி வதுதனயர்க் கருளுவதே யாமதுபோல்
மன்னுயிரின் பகையழிக்கு மாட்சியுமுன் னருளன்றே.

அ ரா க ம்.

தருவள ரிமையவர் தமதுயர் கெடவுயர்
திரிபுர மதுபொடி செயுமொரு நகையினை.

கமலையெ னவொளிய் கலைமக ளெனவரு
விமலையெ னவொருமை மிகுதிரு வடிவினை.

நினைவுறு மடியவர் நிகர்மலர் கொடுமிக
அனவரதமுமறை யொடுதுதி யடியினை.

அருணனி தருதிரு வபயவ ரதமொடு
கருணையின் மழையிரு கடைபொழி விழியினை.

தா ழி சை.

கோமக்கள் மனைதொறுநீ கோயில்கொளும் பேரருடான்
பூமக்கள் வாழ்வு பொருந்தும் பொருட்டன்றே.

செம்பிவள நாடுஞ் சேதுகுல முந்தழைப்ப
தம்பிகையுன் பேரருளே யென்ப தறியார்யார்?

மன்னுயிர்கள் வாழ்வெய்த வாழு முகவைநகர்
அன்னை பெருமையெலாம் யாமறைய வல்லேமோ.

அ ம் போ த ர ங் க ம்.

தந்தை நீ; தாயு நீ
தமரு நீ; பிறரு நீ
சிந்தை நீ; உணர்வு நீ
சிவனீ; யாவு நீ.

என வாங்கு—தனிச்சொல்.

சு ரி த க ம்.

ஆதி மாபரை வேத முதல்வி
விண்ணோர் கன்னின் நண்ணுறு பாவாய்
கோமளா கார சாமளா தேவி
நின்னடி நிதமு முன்னுற வணங்குதும்
பாடல்சால் செம்பி நாடினி தோங்கச்
செங்கோ னடாவு மெங்கோன் மன்னிய

மாராஜர் போற்றுஞ் சீராஜ ராஜன்
ஓதிய வறிவு முயர்பெருந் திருவும்
நீதியு மாயுளு நிலைபெறப் படைத்துப்
பசிபகை போக்கி வசிவளம் பெருகி
விரும்பிய பெருநல மேவிப்
பெரும்புகழ் பூண்டு பிறங்குக வெனவே. (1)

புதரான புலவர்குழாம் புடைசூழ வீற்றிருக்கும் போசன் வாச
மதயானை நிகர்குழலார் மடலெழுது மதிரூபன் மாற்றார் சென்னி
நிதமாருங் கழலுடையான் சீராஜ ராஜனெங்கள் நிருபர் கோனுச்
சிதமேவும் பதினாறு பேறுமுற்றுப் பல்லூழி செழித்து வாழி. (2)

வேறு.

நாடி வரந்தரு மாராம நாத னளினமலர்
பாடி வணங்குமெஞ் சீராஜ ராஜ பதிமகிபன்
கூடி வளர்திரு நாமா துமைபருள் கொண்டுதனுங்
கோடி வளந்தரு கோனூழி வாழ்க குவலயத்தே. (3)

ஆகச் செய்யுள் 25.

---

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

## மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இயற்றியவை.

புகழிற் குலவுதிங்கள் அழகொத் திலகுகங்கை
புனைபொற் சடிலநம்பர் ஆவியே—என
மணமுற் றிடவுவந்த தேவியே—பல

பூதமாதிபெ லாமுமேபெறு மாதயாகரி சீதளாகர
புயலைக் குழலில்வென்ற பூவையே—அறம்
வளரப் புவியில் வந்த பாவையே.

மகிடப் பகையொழித்து சுரர்நித் தலும்வணங்க
வலிமைச் சமர்புரிந்த வீரியே—திறல்
மலைபத் துவசமன்கு மாரியே—திகழ்

வாமிசிரபி ராமிமாசிவ காமிவேடமின் மாமியானநின்
மலரோத் தொளிரிரண்டு தாளையே—துதி
மனசிற் புரிவனிந்த வேளையே.

முகவைப் பதிவிளங்க முதுமெய்ப் புகழ்துலங்க
முடியைப் புனையுமெங்கள் தாயகன்—தமிழ்
மொழியைத் தனிபுரந்த நாயகன்—சுவை

மூவர்பாடலை யோதுநாவொடு பூதிமாமணி பூணுமார்பினன்
முனையுற் றிலகுசெங்கை வேலினன்—மனு
முறையிற் செலவிளங்கு கோலினன்.

நகுலற்கு முனம்வந்த விசயற்கு நிகர்கொண்ட
நயவிற் பனமிகுந்த மானவன்—வரு
கவிஞர்க் குதவுகொண்ட லானவன்—வர

ராமசேதும கிபனாகிய ராஜராஜ மகாதயாநிதி
நவில்சுற்ற முமகிழ்ந்து சூழவே—குடை
நிழலிற் புவிசிறந்து வாழவே. (1)

வேறு.

பந்த பாசமின்றி யைந்து பாணம்வென்று
பண்டை மாதவஞ்செய்—முனிவோர்கள்
பத்தி யோடெழுந்து நித்த மேவணங்கு
பத்ம பாதநங்கை—அபிராமி
கந்த வேளைமுன்ப யந்த நாரிவிஞ்சு
கஞ்ச மாதர்நின்று—துதிமாதா
கர்த்தர் வாமபங்கி லுற்ற தேவிநெஞ்ச
கத்தி லேநிறைந்த—க்ருபையீவாய்
இந்து போல்விளங்கு சுந்த ரானனங்கொள்
இன்ப மார்வசந்த—னெனும்ரூபன்
எற்று வார்கள்மிண்ட னற்ப்ர தாபதுங்கன்
எற்றை நாளுமன்பின்—வசமாவோன்
முந்து சேதுமன்ப்ர சண்ட வேகதந்தி
முன்கு லாவுகின்ற—படைவீரன்
முத்து ராமலிங்க சத்ய ராஜசிங்க
மொய்த்த சீர்துலங்கி—வருமாறே. (2)

## வேறு.

பூத லாதிபர்கள் கோடி கோடி திறை
போத காதிநிறை—வாசலான்
பொற்பின் மங்கையர் விழிக் கருங்கயல்
புபத்தி னின்றுபுரி—பூசலான்
சீதை காதல விராம னனிறுவு
சேது காவல்புரி—வீறினன்
செப்பு கின்றகலை முற்று மன்மொடுப
டித்து நன்குறுதி—தேறினன்
நாத னெமமது ராஜ ராஜமக
ராச போசனனி—வாழவே
நற்பெ ருங்கவியு ரைத்தி டும்புலவர்
நத்தி நண்பினெடு—சூழவே
மாத யாகரியி மாச லாதிபதி
மாத வோதயக—பாலியே
மைக்க ருங்கடலை வெற்றி கொண்டவிழி
வைத்த நின்கருணை—பாலியே. (3)

## வேறு.

மானம் பதியென் றெய்தியபி
மானங் கொடுவாழ் காமதிவி
மானந் தடவு முகவையஜ
மானன் பொருது பகைவரவ
மானம் பெறவெல் பாற்கரபூ
மானன் புதல்வன் கோபதிச
மானன் கணிப்பி லாதவரு
மானன் கவிக்குத் தினந்தருசம்
மானன் பணிக்கங் கணக்கர்த்து
மானன் பதத்து மிகுத்த பத்தி
மானம் பிறைதன் னருள்பெறுசீ
மானன் புடைய மன்பதைக்கம்
மானங் கசனை வெனுமுருவன்
மானம் பெருகக் கிளைவளர
வாழ்வோன் முத்து ராமலிங்க
மன்னர் பெருமான் வாழியவே. (4)

தானம் பொழியுங் கசபதிநி
தானம் பிறழான் மணிமயவி
தானம் பிறங்கு மரியணையாஸ்
தானம் படைத்த சேதுசமஸ்

தானம் புவியின் மீதுபிர
தானம் பெறவந் தவன்சச்சி
தானந் தமய குருசந்நி
தானந் தொழுது கோநிதிபூ

தானம் புரிந்தோன் அட்டாவ
தானம் புரிவோன் றுணிந்துபரி
தானம் பெறுவார்த் துரந்துசமா
தானம் பகர்வார் பணிகொடுச

தானம் பிணரைக் காக்குமனத்
தானங் கயர்வேள் கவித்துவசத்
தானம் ராஜ ராஜமன்சந்
தானந் தழைத்து வாழியவே. (5)

வேறு.

குகனுதி கடவுளர்பே ருறுபவர்போற் பண்டேநின்
குலத்தோர்க் கெய்து
மகராஜ னெனும்பெயரைப் பலர்வகித்தா ரெனினுமப்பேர்
வழங்கற் கேற்ற
தகவாரும் பொருள்குகனு தியர்க்குறல்போற் பெருமைநிற்கே
சாருங் கண்டாய்
நகமேவும் புயராஜ ராஜமுத்து ராமலிங்க
நயபூ மானே. (6)

## தோடா அணிந்தபோது சொல்லியது.

முன்காப்பும் பின்காப்பும் பலர்செயினுங் கடற்புவியின் முறைமைச் சேது
மன்காப்புக் கிணையிலெனப் புரக்குமுத்து ராமலிங்க வள்ளற் கோமான்
என்காப்புக் குள்ளுறுகை யுனக்குமுண்டா மென்னவெனக் கிசைத்தல் போற்
றன்காப்புக் குட்டினன் பொன்வரைமேற் கவித்துவச நாட்டினனே. [பொன்

ஆகச் செய்யுள் 32.

சோளவந்தான் வித்துவான்

**அ. சண்முகம்பிள்ளையவர்கள் பாடியது.**

உலகோம்பு தன்னருட் கார்விழியு மைம்பாலும்
ஒண்ணுதற் கீற்று மிடையும்
ஒப்பெனக் கொண்டுமான் கொண்டலைப் பண்டலையி
னுற்றபிறை யைத்துடியினை
இலகுங்கை தலையின்மேல் வைத்தென்று மறவாம
லியல்யோகு புரியுமீசற்
கெழில்கொண்ட மேனியிற் பாதிதன் றிருமேனி
பெய்துசா ரூபமீந்து
பலகோடி யண்டமும் பெற்றுப் புரக்கின்ற
பாவையினை முகவை நகர்வாழ்
பரமசுந் தரிவிந்தை யமரியந் தரிசிந்தை
பயிலுமன் னையைப்ப ணிகுவாம்
விலகாது பூமாது சேர்மார்பன் முகவையூர்
வேந்தனால் பலவு மோர்ந்தோன்
விதிமாலு மதிசேது பதிராச ராசனை
விரும்பிப் புரக்க வெனவே.

ஆகச் செய்யுள் 33.

---

மன்னார்குடி மிஷன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

**சர்க்கரை ராமசாமிப் புலவரவர்கள் பாடியவை.**

புண்ணியம்பழுத்த கண்ணியம்படைத்த பொருபுனற்செம்பிநன்னாடு
பண்ணியதவத்தின் பயனெனவுதித்த பாற்கரன் குலமுதல்யாங்க
ளெண்ணியவருளிராஜராஜேந்த்ர னினிதுபல்லூழிவாழ்ந்திருக்கத்
தண்ணியநறுவெண்டாமரைமடந்தை தாண்மலர்முடிக்கணிகுவமே.

வேறு.

வானிற் சிறந்து விளங்கமரா வதிபோற் செல்வம் வளர்முகவை
மன்னர் பெருமான் சிவபெருமான் வாமம் பிரியா மதிவதனத்
தேனிற் சிறந்த மொழியுமையாள் செந்தாமரைத்தாள் பதிந்தவுளச்
சீமா னிரவி குலதிலகன் செம்பி வளநா டாளவந்த

கோனிற் சிறந்த வதிவீரன் கொடையாற் றருவை வெலுங்காவிக்
குடையான்பொறுமைக்குத்தருமன்கொட்டமடக்கிமலரெய்கரும்
பானிற் சிறந்த பேரழகு படைத்த ராஜ ராஜேந்த்ரன்
பாவா ணருக்குத் தாயாயிப் பாராண் டூழி வாழியவே. (2)

பரிக்கு நகுலன் பரதளவி பாட னசுவ பதியுயர்கோ
பாலன் மூவ ராயர்கண்டன் பட்டர் மானங் காத்தான் பொற்
கிரிக்குக் குன்று வளைபொறித்தான் கீர்த்திப் பிரதா பன்பெருகு
கிருபா நோக்க னரபதிசங் கீத நிபுணன் றடக்கரையிற்
கரிக்கு முனம்வந் தருள்புரிந்த கருணா கரனீ ழமுங்கொங்குங்
கஜவேட்டைகள்செய்காம்பீர்யகனவான்புரமூன்றெரிக்கமுன்னாட்
சிரிக்கும் பெருமா னிடம்பிரியாத் தேவி ராஜே சுவரிபுகழ்
தினஞ்சொல் ராஜ ராஜவள்ளல் செங்கோ லூழி வாழியவே. (3)

அண்டர் படியுந் தனுக்கோடிக் கதிபன் வாழி தயைபொறுமை
யடக்கம் வாய்மை கொடைகல்வி யறிவு தவமா தியகுணங்கைக்
கொண்ட விரவி குலம்விளக்குங் கோமான் வாழி பாற்கரவேள்
குமரன் வாழி யெங்கடவக் கொழுந்து வாழி யென்நாளுங்
கண்டே யனைய கவிப்புலவர் களுக்கு மிசைநூல் வல்லவர்க்குங்
கனக மழைபெய் செங்கைபெறு கனவான் வாழி யுலகமெலாந்
தெண்ட னிடச்சிம் மாசனத்திற் சேரும் ராஜ ராஜேந்த்ரன்
செங்கோல் வாழி யவன்குடைக்கீழ்ச் சேர்வோர் வாழி வாழியவே

பூமே வியதா தனைந்தாடும் பொறிவண் டிசைக்குத் தேன்பரிசில்
பொழியுந்தளவமானிபுயனெம்போல்வார்கவியைப்போக்குகொடைக்
காமே வியசெங் கரனடியார் களுக்கு வேலைக் காரனெளிர்
கதிரோன் மருமா னுபர்சகல கலைவிற் பன்னன் கவின்முகவைத்
தேமே வியசற் கீர்த்திபெறு சீமான் ராஜ ராஜவள்ளல்
செங்கோல் செலுத்திப் பல்லாண்டிச் செகத்தைப் புரக்க வருள்புரிவாய்
மாமே வியசெம் மணிமகுட மகிபர் பணியவ் விறைவனரன்
மனைவாழ் ராஜ ராஜேசு வரியே தெய்வ மடமயிலே. (5)

பத்தி முதிர்ந்தோ ருளத்தடத்தும் பரமே சுவர னிடப்புறத்தும்
பாரிற் சிறந்த தனிமுகவைப் பதியிற் பருதி குலதிருபர்

முத்தி விழைத்த வரண்மனையின் முகப்பிற் பொன்னு லமைத்துமணி
முடிகள் சுமந்த சினகரத்து மூரிப் பகட்டு வாளவுணன்
சத்தி யழித்த கோலமொடுந் தங்கும் ராஜே சுவரிநின்றன்
சரண பதுமந் தொழுதேத்துஞ் சாடிக் காரர் கண்டன்மனச்
சுத்தி யுடைய பிரதாப சுகுணன் ராஜ ராஜேந்த்ரன்
சுகமாய்ச் செங்கோல் செலுத்தவருள் சுரந்தெந் நாளும் புரந்தருளே. (6)

தேனைப் பழிக்கு மினியமொழித் தேவீ யளகா புரியென்னச்
செல்வம் பொலியுந் தனிமுகவைச் சேது பதிகள் திரவியமே
வானைத் தகர்க்கு மணிமுரசம் வாய்விட் டொலிப்ப வேந்தரெலாம்
வரிசை பெறநின் றேவல்செய வண்ணக்கவரி புடையிரட்டச்
சேனைக் கடல்சூழ் தரப்பலவாத் தியங்கண் முழங்கப் புலவர்குழாஞ்
செப்புங் கவிபு நான்மறையுஞ் சிறந்தோர் செவிகட் கமுதாக
மானைப் பழிக்குங் கரியவிழி மடவார் நடிக்க நாளுமுனை
வணங்கும் ராஜ ராஜேந்த்ர வள்ள லுவக்கும் வரமருளே. (7)

பரமா னந்தத் தேன்பொழியும் பததா மரையிற் கிண்கிணியும்
பசும்பொற் சிலம்பு நூலிழையைப் பகிர்ந்த தனைய சிற்றிடையிற்
றிருவார் பட்டு மேகலையுஞ் செங்கைக் கிளியும் பொன்மலைமேற்
றிகழ்வெள் ளருவி யெனத்தரளஞ் சேருங் குயமு மங்கலநாண்
வரமார்ந் தொளிருந் திருக்களமும் மதியைப் பழித்த குளிர்முகமும்
வளர்வெண் ணிலவிற் புன்னகையும் வடியாக் கருணைக் கடல்முழுகி
வருசேற் கண்ணும் வடிவழகும் வயங்கும் ராஜ ராஜேசு
வரியே முத்து ராமலிங்க வள்ள லுவக்கும் வரமருளே. (8)

கண்ணன் றிருப்பாற் கடலையரன் கயிலை மலையை வாசவன்வெண்
கரியைக் கரும்பாம் பொளிர்மதியைக் கமலா சனத்தோ னோதிமத்தை
நண்ண வறியா துழலவெங்கு நாட்டும் புகழான் சிராம
நாதன் பாத பூசையெந்த நாளும் புரியுஞ் சாமளமால்
வண்ண னனும கேதனன்மே வலர்கள் வணங்கு மிருதாளான்
வானோர் புகழும் வீரவெண்பா மாலை புனைவோன் பாற்கரவேள்
பண்ணுந் தவத்தின் பயனுறப் பலித்த ராஜ ராஜனென்றும்
பாங்காய்ச் செங்கோல் செலுத்தவுமை பதும மலர்த்தாள் பரசுவமே. (9)

ஆகச் செய்யுள் 12.

மதுரை வித்துவான்

## சுந்தரேசுவரய்யரவர்கள் பாடியது.

பூவி லிருக்கு நான்முகனும் புரந்த ராதி யமரர்களும்
போற்று முலவாப் பெருநிதியே போத மதியே வுபர்தருமச்
சேவி லிருக்கும் பரன்பாகந் திகழப் படரும் பசுங்கொடியே
திவியார் மதில்சூழ் முகவைவளர் தேவி யருள்செய் செழும்புலவர்
நாவி லிருக்கும் புகழுடையா னல்லோர் மதிக்கு முயர்நடையான்
ராஜ ராஜ சேதுபதி நலனுர் திருமா மாதுபதி
காவி லிருக்குஞ் சதமகன்போற் கவினுந் திருவுஞ் செயமுமுற்றுக்
காதன் மக்க ளுறவினெடுங் களித்தெந் நாளும் வாழ்ந்திடவே.

ஆகச் செய்யுள் 43.

---

மதுரை ஸேதுபதிஹைஸ்கூல் உபாத்தியாயர்

## எஸ். சாமிநாதையரவர்கள் பாடியவை.

பூம்பொழிலார் கங்கைமுதற் புனித முற்ற
புனலாடிக் காசிமுதற் புகழார் தேவை
ஆம்பலமா நலம்பெற்ற அருந்த லங்க
ளன்புடனீ தரிசித்தே யருளும் பெற்றுப்
திம்புனலார் யமுனையமர்ந் தெவரும் போற்றும்
டில்லிநகர் ஜார்ஜரசால் தீண்டப் பெற்றே
ஓம்புபெரும் புகழ்படைத்தா யுன்போற் பாக்பம்
உன்குலத்திற் பிறந்தோரில் யார்பெற் றுரே. (1)

வேறு.

அந்தண ரருநூல் வல்லோ ரருங்கவிப் புலவர் யார்க்குஞ்
சிந்தைகள் களிக்கும் வண்ணஞ் சிறுறப் பரிசு நல்குங்
கந்தமா தனஞ்சார் சேது காவலன் ராஜ ராஜன்
சுந்தரத் தோளான் வாழச் சுந்தரி யருள்செப் வாயே. (2)

வேறு.

அமிழ்தினு மினிதா மகத்திய முதலா வரிய நூல் பற்பல செறிந்த
தமிழ்நிலைபெறவேதாரணியிற்றுங்குந் தனிமரபுதித்தசெங்குடையான்
இமிழ்திரைக்கடல்சே ரியம்பரு சேது வின்கரையமரெழினம்பன்
கமழ்பதம்போற்றுங்கனமுறுகோவைக் காத்தருள்செய்குவாயம்மே.

வேறு.

பகுவாய்க் கொக்கின் பிள்ளை பைங்காற் பழனத் தூடே
புகுநீ ரோடை யமர்ந்து போந்த கயல்சேல் கவ்வி
நகுதல் செய்யும் முகவை நன்னாட் டெங்கோன் நாளுந்
தகுசீர் பலவும் பெற்றே தழைத்துச் சுகமாய் வாழி. (4)

வேறு.

உலகெலா மூவப்ப நாட்டின் உரிமையை யோர்ந்து மீட்டுப்
பலனெலாந் துய்க்கப் பெற்ற பண்புடை யிராஜ ராஜன்
குலமெலாந் தழைக்கக் கோதில் குணமுடை யரவோ ரேத்த
நலமெலாம் பெற்று வாழ நாமக ளருள்செய் வாளே. (5)

ஆகச் செய்யுள் 48.

---

திருக்கண்ணபுரம் தமிழ்வித்வான்

பி. ஆர். கிருஷ்ணமாசாரியாரவர்கள் பாடியவை.

பூரண ஞானப் புலவோர் புனைதமிழ்ப் பூந்தொடைக்கு
வாரணங் கோடி தருராஜ ராஜன் மனமகிழக்
காரண மாகிய செல்வங்கண் மல்கக் கருணைசெய்வாய்
ஆரண வேதச் சிலம்பணி பூண்டொளி ரம்பிகையே. (1)

பூமாது மேன்மேற் பொலிகின்ற செல்வப் பொருள்கடர
நாமாது கல்விப் பெருவாழ்வு ஞானமு நல்கவுயர்
கோமாது நீயுங் குறையாத வென்றி கொடுத்தருள்வாய்
நேமா துலர்க்குத் தருராஜ ராஜ நிருபனுக்கே. (2)

கண்டார் பவப்பிணி போக்கும் புகழ்ச்சேது காவலவன்
தண்டார் புனைமுத்து ராமலிங் கேந்த்ர தபார்ணவத்தில்

வண்டார் குழன்மங்கை யேநின்கருணை மழைபொழிந்தாற்
றிண்டா ரணிக்கது சிவன மாகிச் சிறந்திடுமே. (3)

சொன்மாரி பெய்புல வோனென்னல் நின்னைத் துதித்திறைஞ்சி
நன்மாரி வேண்ட வளித்தநின் பொன்னருள் நான்றெரிந்து
கன்மாரி காத்தவன் றங்கா யொருவரங் காதலித்தேன்
பொன்மாரி மாராச ராசற்கு நாளும் பொழிதரவே. (4)

ஆகச் செய்யுள் 52

---

இராமநாதபுரம் வக்கீல்

## சுந்தரராஜய்யரவர்கள் பாடியவை.

பூதலத்தோர் பாவமெலாம் போக்குபுன லாடற்குக்
காதலுற்று வந்த கலைஞர்குழாம்—நாதனெனப்
போற்றுமுத்து ராமலிங்க பூபற்கு மேன்மேலும்
ஏற்றமளிப் பாய்நிமலை யே. (1)

வேறு.

ஏடங் கெதிர்செலு மின்புனல் நாட்டுக் கிறைவனுன்முன்
பாடுங் கவிபண் ணிசைபண்டை நான்மறை பல்லியமுங்
கூடுங் குழுற வொராஜ ராஜனெனுங் கொண்டல்வந்தான்
நாடுங் களிப்புற நன்மாரி தந்தருள் நாரணியே. (2)

நாட்டுவித் தாரமுன் போலமை நற்பயன் நம்மரசுக்
கூட்டுவிப் பானே ருயர்நல் லமைச்சும் உவந்தளித்தாய்
சேட்டநல் வித்தொடு செய்க்குரம் சேர்த்தாய் செழும்புனலுங்
கூட்டுவிப் பாய்குலக் குன்றிடைத் தோன்றிடும் கோமளையே. (3)

வெண்பா.

மன்னன் முகவை வளநாடன் செந்தமிழ்க்குத்
தென்னவன் வாழியவன் சீர்வாழி—கன்னனிகர்
சீலமுத்து ராமலிங்கச் செம்மல் கிளைவாழி
கோலமுற்று வாழி குலம். (4)

ஆகச் செய்யுள் 56.

---

## திருவையாறு சம்ஸ்கிருத காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சந்தானமய்யங்காரவர்கள் பாடியவை.

புவியினைப் பொறையாற் றருவினைக் கொடையாற்
பொன்னினைப் புந்தியா லென்றுஞ்
சவியுறு குணத்தா லவரிற் றலைபாந்
தருமனை நிகர்த்தமே தகையான்
குவியுறு நிதியாற் குலவுநன் முகவைக்
கோமக னிராஜரா ஜேசன்
கவிகையி னீழ லுலகெலா நிலவக்
கவுரிதன் கழல்பர சுதுமே. (1)

வேறு.

பொன்பூத்த தாமரைமென் பொகுட்டிலுறை தருமாதர்
புகழ்ந்து வாழ்த்த
மின்பூத்த மணிமுடிசேர் விண்ணவரு மண்ணவரும்
வியந்து போற்ற
இன்பூத்த கொலுவமரும் ராஜரா ஜேச்வரிநீ
யென்றுங் காக்க
மன்பூத்த விசைமுத்து ராமலிங்க சேதுகோ
மானை மன்னே. (2)

நலமன்னும் பலகலைக ளொருங்குணர்ந்த நயசுகுணன்
ஞானச் சீரான்
புலமன்னும் புலவோர்கள் சொன்மாலை மலர்மாலை
புனையுந் தோளான்
கலமன்னுங் கார்க்கடலுன் டெழுமேக மெனப்பொழியுங்
கமலக் கையான்
பலமன்னு முகவைமுத்து ராமலிங்கப் பாக்கியவான்
பண்பின் வாழி. (3)

வேறு.

முகவைப் பதிக்கிறைவன் முத்தமிழ்நூற் பாடன்
மிகுமுத்து ராமலிங்க வேந்தன்—றகையுடனே
பல்லுகமும் வாழப் பரிந்தருளப் பாரதிநின்
மெல்லடியை யான்வேண்டு வேன். (4)

### வேறு.

நாடும் பொருளணி சொல்லணி யாய நலமுடனே
பாடும் படியருள் பங்கயத் தாய்நிற் பணிகுவன்யான்
கூடுந் தமிழ்ச்சுவை கொள்பா வலர்க்குக் கொடைமிகுத்து
நீடு மிசைமுத்து ராமலிங் கேந்த்ர னிலவவென்றே. (5)

ஆகச் செய்யுள். 61.

---

நாகை நீலலோசனிப் பத்திராதிபர்

## ஸ்ரீ. சதாசிவப்பிள்ளையவர்கள் பாடியவை.

பூங்கமலத் தயன்முதலாம் புத்தேளி ரெல்லாரும்புகழ்ந்துபோற்று
மாங்குபிலே திரிபுரசுந் தரிநாம மாமயிலே வழுத்து வேன்யான்
தேங்குபுகழ்ச் சிராஜ ராஜேந்த்ர சேதுபதி செங்கோ லென்றும்
ஓங்குறநல்லருள்புரிவாயோங்காரத்துட்பொருளாயோங்குந்தாயே. ()

அக்கரத்திற் கோரிலக்க மள்ளியள்ளியளித்திட்ட வரசேமீண்டுந்
தக்கிணத்திலவதரித்துத்தமிழ்க்களித்தபாற்கனுர்தவத்துச்செல்வன்
றிக்குநிறை புகழாளன் சிராஜ ராஜேந்த்ரன் செங்கோலோங்க
மிக்கவருண்மழைபொழிவாய்திரிபுரசுந்தரியென்னுமேன்மைத் தாயே. (2)

### வேறு.

பூமனுட னீரேழ் புவனங்கள் பூத்திமவான்
கோமகளாய் வந்த குலமணியே—பூமிபுகழ்
சிராஜ ராஜனெனுந் தென்சேது நாடாளு
மாராஜன் கோலோங்க வை. (3)

தாதவிழும் வெண்கமலத் தண்பொகுட்டில் வீற்றிருந்
தாதிமறை யோதுகலை யாரணங்கே—சேதுவெனுந்
தென்னுட்டை யாள்கோமான் சிராஜ ராஜனுக்
கன்னுப்நீ செய்வா யருள். (4)

வெற்றித் திருவே விமலையே சேதுபதி
கொற்றத் தனிநெடுவேற் கோமாற்கு—வெற்றியுடன்
செல்வஞ்சே யெல்லாஞ் செழித்தோங்க வெந்நாளு
நல்லருள் செய்வாய் நயந்து. (5)

வாழி யருமறைகள் வாழி தமிழணங்கு
வாழி கடல்சூழ் மகிதலமும்—வாழியரோ
சீராஜ ராஜனெனுஞ் சேதுத் திருநாடன்
மாராஜ னுக மகிழ்ந்து. (6)

ஆகச்செய்யுள் 67.

---

வலயபுரி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர்
நெடுவை வித்துவான்.

## திரு. இராமசாமியையங்காரவர்கள் பாடியவை.

பூமணக்கு மின்னார் புயமணக்க வைத்தமரர்
காமணக்குங் கையான் கனயோகன்—சீமான்
திகழ்ராஜ ராஜேச் வரன்சேது நாதன்
மிகவாழி மேன்மேலு மே. (1)

பூமான் முகவைப் புகழ்முத்து ராமலிங்க
சீமான் மதியாற் சிறக்கவே—நாமாது
தன்னைப் பணிந்துதுதி சாற்றினே னன்னவனுக்
குன்னுதிரு நாளிதென வோர்ந்து. (2)

வேறு.

மின்னினமை பலவிளக்கம் விசித்திரமாய் மிளிர
விசைக்கறங்கு மிசைச்சுழன்று விளங்கவிய மார்ப்ப
நன்னர்மணி மண்டபத்தின் மன்னுமரி யணைமேல்
நலங்கொளமாத் தியரறிஞ ரிலங்கவமர்ந் திருப்பாய்
தென்னர்தமிழ்க் கொருசெவிலி யெனத்திகழ்சே துபதி
திருமரபு தழைக்கமண மருவியகற் பகமே
மன்னர்பணி சீராஜ ராஜவரோ தயநீ
வாணியரு ளால்நாளும் வாழியவா ழியவே. (3)

வேறு.

புண்ணிய வானெங்கள் சீராஜ ராஜ புரந்தரன்பார்
பண்ணிய மாதவம் போல்வான்றன் சேது பதிமகிபன்
நண்ணிய நாடுசெங் கோன்மேவ வைத்தெந்த நாளுமுளத்
தெண்ணிய வாறு புரிவாயி ராஜரா ஜேச்வரியே. (4)

ஆகச்செய்யுள் 71.

தூத்துக்குடியிலிருக்கும் திருவாவடுதுறை ஆதீனச் சைவப்பிரசாரகர்

## பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் பாடியவை.

உலகினுள தெய்வமெலாந் தன்செயலின் வழிநிற்ப
வொருவன் பாகத்
திலகுறுநற் றேவிமுக வைக்கதிப ரரன்மனையி
லென்றும் வாழுந்
திலகமெனுந் திரிபுரசுந் தரிமுத்து ராமலிங்க
சேது வள்ளல்
நலமுழுது மொருசேரப் பெறநினது திருவடியை
நாடு வேனே. (1)

வேறு.

பொன்னுலகந் தனினுமிகச் சிறப்புற் றோங்கும்
புலவர்புகல் முகவையரண் மனையி னுளும்
பன்னுமறை யோர்கள்விதிப் படியர்ச் சிக்கப்
பரமகரு ணைநிதியாய் வாழுந் தாயே
தன்னிகரார் திரிபுரசுந் தரியே யெங்கள்
தராபதிநற் சேதுபதி செங்கோ லென்றும்
இந்நிலத்து நிலைபெறநற் பொருளின் பங்கள்
இன்னுமிகப் பெருகவருள் புரிகு வாயே. (2)

நற்றவத்தோ ருள்ளத்தி லறிவாய் மன்னி
நற்பொருளை யறிவிக்கு நலமே ஞால
முற்றுநிறைந் தகண்டமா யதீத மாகி
முகவைவாழ் திரிபுரசுந் தரியே யம்மா
கொற்றவன்சீ மான்முத்து ராம லிங்கக்
குரிசிலினி தாகவர சாட்சி செய்து
கற்றவர்கள் புடைசூழக் கலந்து வாழக்
கருணைசெய நினதடிகள் கருது வேனே. (3)

முன்னவனே முன்னுளில் வேந்த னாகி
முறைப்படியிம் முதுநிலத்தை யாண்ட வாறே
பன்னரிய பரமசிவ பத்தி வாய்ந்து
பாவலர்க ளிசைவலர்கள் பக்கஞ் சூழ

முன்னரிய மதிநுட்ப முடனே மேலா
முத்தமிழாய்ந் தரசெய்தி முகவை யாளும்
இன்னிறையே சேதுபதி ராஜ ராஜ
ஏந்தலே எந்நாளும் வாழி வாழி. (4)

வேறு.

மூவேந்த ரேயென்ன முத்துச்சிம் மாசனத்திற்
கோவாய்ச் சிறந்து கொலுவிருந்து—பாவாணர்
போற்றச்செங் கோல்கொள் புவிராஜ ராஜவள்ளால்
ஏற்றமுடன் வாழ்க இனிது. (5)

ஆகச்செய்யுள் 76.

---

மாட்சிதங்கிய சேதுபதி மஹாராஜா அவர்கள் சமுகத்திலிருக்கும்

## வி. திருஞானசம்பந்தக்கவிராயர் பாடியவை.

புவிவைத் திலங்கு புயபலத்தான் பொருள்வைத் திலங்கு மதிநலத்தான்
புவனந் தொழுசீர் மிருதலத்தான் புனித சேது குளிர்ஜலத்தான்
கவிவைத் திலங்கு மிசைசொலத்தான் கருது மியறோர் பிரபலத்தான்
கருணைத் துரைவேள் ரகுகுலத்தான் கனமைந் தருநேர் கரதலத்தான்
திவிவைத் திலங்கு தாசரதி சீமான் ராம னருள்படைத்தான்
திகழி ராஜ ராஜேசன் சிறப்புற் றினிதே மகிழவருள்
நவிவைத் திலங்கு விழிக்கவுரி ராம நாத புரத்தரசர்
நலஞ்சேர் கோயில் வீற்றிருக்கும் ராஜ ராஜேச் வரியுமையே. (1)

வேறு.

செங்கரும் பன்ன மொழிமட வார்க்கிதஞ் செய்யுமதன்
துங்க மிருந்த புகழ்ராஜ ராஜ துரையிவனே
சங்க நிதியன்ன செல்வம் படைத்திசை தாங்கியுயர்
மங்கள மாக வுலகாள நீ யருள் மாதரியே. (2)

பாலிக்குஞ் சைவப் பயிர்வளர்க் கின்ற பருவமழை
தாலிக்கு வேலி யெனும்ராஜ ராஜ தராபதிக்கு
வாலிக் குடனைந்து பாணமு மேந்தி வயங்குமியற்
சேலிற்கு நேரும் விழியம்மை நீயருள் செய்திடவே. (3)

மாணிக்க மாதி மணியணி யும்புய வள்ளலருள்
பேணிக் கருணைக் கடலே தனக்குநற் பெற்றிபெறக்
காணிக்கை யாதி தரும்ராஜ ராஜநற் காவலனை
வாணிக்கும் பூவின் மகட்கு மிருப்பிட மாக்குதியே. (4)

ஆக்குவித் தானுடன் றேன்றி யுலகத்தி யாவையுநன்
ருக்குவித் தாய்முக வாபுரி வாழ்வுறு மம்பிகையே
மீக்குவித் தாக்கு நிதிராஜ ராஜ விதாணற்குப்
பாக்குவித் தார்செய்யுந் தோத்திரத் தாயருள் பாலிக்கவே. (5)

யுகங்கொண்ட வாயுளு மேலாகும் பாக்கிய யோகமுநன்
மகங்கொண்ட சீர்த்தியுஞ் சிராஜ ராஜ மகிபனுறக்
ககங்கொண்ட மாயவன் பின்வந் துதித்தமுக் கண்ணியருள்
நகங்கொண்ட மேனை தவங்கண்ட காதலி நல்குதியே. (6)

வேறு.

திருவுங் கலைமகளுஞ் சேர்ந்தினிது மல்கு
மருவு மலர்ப்பொழிலு மன்னும்—பெருவளஞ்சேர்

செம்பிநா டாண்டருள்வோன் தேவாரங் கண்டுசைவ
வம்புலாம் வைகை வளநதியான்—கம்பிரமாம்

நான்மருப்புக் குஞ்சரநேர் நண்ணும் புகர்க்களிற்ருன்
மான்மருவு முச்சைஸ் வரநிகரு—மாவுடையான்

முல்லையெனு மாலை முருகுயிர்க்குந் திண்டோளான்
கல்லையொரு பெண்ணுக்குங் காலினன்—அல்லிலகும்

சிதமதி வான்புகுத்துஞ் செங்காவி யங்குடையான்
சோதிமிகுங் காவிகவி தொல்கருடன்—நேர்திகழுங்

கேதனத்தான் மண்மேற் கிளர்தனத்தான் வெண்கந்த
மாதனத்தான் றென்முகவை மாநகரான்—ஆதவன்றன்

கோத்திரத்தான் சிராமன் கோடிபெறும் புண்ணியஞ்சேர்
காத்திரத்தான் வண்சேது காத்திருப்பான்—கீர்த்திக்

கருங்கழலன் செங்கமலங் கார்நிகர்வண் கையான்
நெருங்குபுகழ் மும்முரச னேசார்—சிரங்குனிய

வள்ளுநறைபி னீங்காத வாளா யுதக்குரிசில்
அள்ளிலவே லண்டர்பணி யாண்மைபான்—தெள்ளியசீர்ச்

சிந்தா மணியைந் தருக்காம தேனுநிகர்
நந்தா மணித்திருவார் நாயகவேள்—சிந்தாப்
பல்கலையுங் கற்றுப் பயனுந் தெளிந்தவற்றைத்
தொல்புவியோர் கேட்டுச் சுகம்பெறவே—சொல்லிமணந்
தான்களிசேர் தூயமனத் தார்வேந்தன் பாற்கரவேள்
மான்கருதிப் போந்ததிரு வண்சரணத்—தான்புரிந்த
செய்ய தவத்துதித்த சீமானெஞ் சேதுபதி
துய்ய பெருங்குலத்துத் தோன்றினான்—மெய்யபுகழ்ச்
சீராஜ ராஜனெனுஞ் சேதுபதி யாதரத்தால்
மாராஜர் மண்டலிகர் மந்திரிகள்—பேராரும்
நாற்படைகள் சூழ்ந்து நலமார்ந் தினிதிலங்கக்
கார்ப்பருவ மாமயில்போற் காசினியோர்—சீர்ப்பொலிவ
முன்னாகக் கண்டு முகமலர்ந்து கண்களிப்பச்
சன்னாகத் தோடெழுந்தே தற்பரைநின்—பொன்னாரும்
பாதம் பரவிப் பணிந்து நவநிசியிற்
போதம் பெறநினையே போற்றினான்—பூதலந்தாம்
போற்று முகவா புரியரசர் பொன்மனையுட்
டோற்றுஞ் சிகரத்துட் சோதியே—ஆற்றலுறுந்
தேவி யருட்கட் டிரிபுரையே மூவருக்கும்
ஆவி யெனவொளிரும் அம்பிகையே—சேவைசெயா
மாமகிடன் றன்னைவெல்லு மாதரசி யையையுயர்
வாமியபி ராமி மகமாயி—ஏமசபைப்
பெம்மான் மகிழும் பெருமாட்டி யெம்மரசர்
தம்மாவி யன்ன தயாபரியே—செம்மையுறுந்
தேனே திரவியமே தேமொழியே மாமயிலே
மானேர் தருவிழியெம் மாதாவே—பானேர்சொற்
சீராஜ ராஜேச் வரியென்னுந் தெய்வமே
மாராஜ ராஜேச் வரனெனும்பேர்—நேராகும்
எம்பெருமான் சேதுபதி யேற்றமுறும் பண்டிதர்கள்
தம்பெருமான் என்றுந் தழைந்தோங்கி—யம்புவியிற்

றண்ணியாண் பீகை தயவாண்மை கல்வியெழில்
புண்ணியமா மாதர் புதல்வரறி—வெண்ணரிய
தீர்க்கந் திகழ்வபது சேமநிதி யாவையும்பெற்
றோர்க்கந்த னென்ன இசைபெருகி—ஊக்கமுடன்
வாழ்வுபெறக் காத்தருள்வாய் மாண்பார் பரம்பொருளே
தாழ்வணுகா தாளுந் தயாநிதியே—கேழ்கிளரும்
முக்கட் கனியே முதல்வியே நாரணியே
தக்கற்கினிய தனிமையே—எக்கணமும்
இன்பம் பெருகியிவ னெல்லாரும் போற்றிசெய
மன்பெருமை மல்க மகிழ்ந்து. (7)

விண்ணிற் கிசைந்த வியன்பொழிலே விளங்கு முகவா புரிக்கதிபன்
கண்ணிற் கிசைந்த விலக்கணஞ்சேர் கவிஞர்ந்திலகு முருவுடையான்
பண்ணிற் கிசைந்த கவியியம்பும் பண்பார் கீத மதியூகி
எண்ணிற் கிசைந்த நன்னகையன் இராஜ ராஜன் இசைபெறவே (8)

மாரியம்மன்பேரிலியற்றியவை.

பூமேவு மாதினொடு நாமேவி மாதுமதி போலாரு மாவதனியுன்
புகழோது தொண்டர்தம தகமேவி நின்றவர்கள் புகலேவல் கண்டிலவுவார்
நேமேவி மாதரியு மாகாரி யாயியென நேமாதி பூஜை யுடனின்
நிறையேரி லங்குசின கரநே ரெழுந்தருளி நினையே பணிந்தவதனுல்
மாமேவு வானவர்கள் பூமாரி வாழியென மாதாக வேசிதறியவ்
வகையே பிறந்ததின மிதுவேயெ னும்படியெல் வளமேவி டும்பவனிசேர்
தேமேவு சீரமுறு ஸ்ரீராஜ ராஜதுரை சிர்மேவி வாழவருள்வாய்
திருநீல கண்டர்மகிழ் செயலே யடைந்துலகு திகழ்மாரி யென்றவுமையே.()

வேறு.

காவைத்திலங்குமுகவையர்கோன்கனிவைத்திலங்குமிசையுடையோன்
ஏவைத் திலங்கு விழிமடவா ரிதயத் திலங்கு முருமதவேள்
தேவைத் துரையெஞ் சிராஜ ராஜன் றனசீர் சிறந்தொளிரப்
பாவைத் திலங்கு துதிபுரிந்தெம் பரையுன் னிருதாள் பரவுதுமே.

வேறு.

ஈசுவரி யம்பிகையே யெவ்வுயிரும் போற்றிசெயும்
வாசவனேர் சேதுபதி மாராஜன்—பேசுபுகழ்ச்
சிராஜ ராஜனெனுஞ் செம்மலெல்லா வின்புமுற
மாராரி மாரியருள் வாய். (11)

வேறு.

திருவந்த மாமுக வாபுரி யாண்டருள் சேதுபதி
தருவந்த செங்கையன் ஸ்ரீராஜ ராஜ தராபதிநல்
உருவந்த மாரனிக் கோரூழி யாயு ளுடன்மகிழ
மருவந்த செந்தா மரைத்தாட் டிரிபுரை வாழ்விக்கவே. (12)

மாகம் பராவுறுங் கோடிக் கதிபதி வண்புனித
யோகம் பராய முகவா புரிக்கோ ருதயமதி
மாகம் பராய புலவோர்ப் புரக்கு மகிபதிதி
யாகம் பராயகைச் சிராஜ ராஜ னிதம்பெறவே. (13)

பல்லவி.

புந்தியமர்த்தியற்றுஞ் செந்தமிழிருங்கவிப்
போதங்கொண்டருள் தெய்வமே.

அநுபல்லவி.

சந்ததமுன்கருணை சிந்தனை செய்யுந்துய்ய
சத்துவ மேவுபுகழ் முத்து ராமலிங் கேந்த்ரன். (புந்தி)

சரணங்கள்.

செந்திரு வேமுதலாஞ் சேடியர் போற்றிசெய்யுஞ்
சந்த மிருந்த பத தாமரைமா மலரைச்
சொந்த மெனநிதந்தன் சோதிமுடியிலணி
தூயபுனிதகுண ராஜ ராஜ மஹீபன். (புந்தி)

பன்னுபன் மறைகளும் பைந்தமிழ்க் காப்பியமுந்
துன்னுமுப் பொருளுந்தேர் தோன்றல்பாற் காண்றந்த
கன்ன னனையவண்மை மன்னு நிருபன்சப
காரிய பாரிஞான சூரியன் ராஜ ராஜன். (புந்தி)

மூவர்பரவுதுதி மேவு பரம சிவன்
தேவியே மூவர்க்கு மாவியே நினைத்தொழுங்
காவலன் பாவலர்தம் பாவலன் நாவலர்க்குக்
கண்மணி யன்னகவின் மன்மதன் ராஜ ராஜன். (புந்தி)

இராகம் - சங்கராபரணம்.

(முத்துக் குமாரையனே யென்றது போன்றது.)

சித்தி யருள்தெய்வமே நித்தந்துதிசெய்வமே (சித்)

பத்திமேவு புகழ் முத்து ராமலிங்க வித்தகாதிபதிவேள்—சித்தசனே
யொத்த சேதுபதி தான் நத்து (சித்)

தேச தேசமஹா ராஜ ராஜர்பணி ராஜ ராஜனுளமேம்—ஈசர்மகிழ்
நேசமேவு களமே தேசு (சித்)

நேமமேவுதிரு ராமநாதபுர மாமகிபர்தனமே—யேமசபை
மீமகேசர் மனமே வாமி. (சித்தி)

ஆகச் செய்யுள் 91.

---

இராமநாதபுரம் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

**சுந்தர ராஜய்யங்காரவர்கள் பாடியவை.**

அன்னதா னம்பெரிதென் றன்புமிகக் கொண்டுதவிச்
சொன்னதா னம்பொழியுந் தூயவனே—பன்னருஞ்சீ
ரோங்குமுத்து ராமலிங்க வுத்தமமன் ஞமுகவைப்
பாங்குசெங்கோல் வாழிபூ பா. (1)

சங்கினங்க ளீனுந் தரளங் கொழிக்குமுயர்
கங்கினஞ்செய் சூழ்முகவைக் காவலவா—விங்கிதஞ்சேர்
சிங்கமுத்து ராமலிங்கச் சேதுபதி வாழிநிதம்
மங்களங்கண் மேன்மேலும் வந்து. (2)

வேறு.

பூந்தவிசி லுற்றதிரி புராலந்த நீவேத
சுருதியெட் டாத பொருளே
புத்திகொடு பூசனைகள் புரியுமுள மதிலுலாய்ப்
புத்தமுது பொழியு மருளே
காந்தமதி லூசியுரு மந்தனைய முகவைநகர்
கண்டுவந் தருள்செய் கனியே
காசினியி லுன்மகிமை யாரறிவர் கண்டகவ
தஞ்செய்திரி சூலி யுமையே

சாந்தணி புயத்தவிர ணியகர்ப்ப யாஜிரவி
குலராஜ ராஜ தனதன்
தகைமலர்த் தாரணியு மெங்களிறை வன்றனைச்
சார்ந்தவர்க் குதவு தருவான்
ஏந்தலிள மங்கையர்த முளமுவப் புறுபுய
னிருங்கலிப் பகைகு னுரவோன்
எண்ணேங்கு மார்க்கண்ட னைப்போல வென்நாளு
மினிதுநனி வாழ வருளே. (3)

வேறு.

கொன்றையாரணிச்சடிலன் கோலவிழி மாதுபங்கன் குன்ற வில்லன்
மன்றையாரணிநடஞ்செய்மழவிடையோன்மலர்ப்பதமர்ச்சித்தாநந்த
என்றுபணியிரவிகுலத்தேந்தன்முத்துராமலிங்கவெழிலோன்வாழத்
துன்றுசினங் கொண்டு மகிடனை வதைத்த சூலிநீ யருள்க மாதோ.

பூரணியே சுரர்முதலோர் போற்றுகம லாலநியே புகழுற் றேங்கு
தாரணிசிங் கேறூர்தி சாரவெழுந் தருள்சுரக்குந் தாயே யாள்வாய்
ஆரணியுஞ் செஞ்சடைய னருட்கமலத் தாட்டுணைக ளணியுமெங்கள்
ஏரணியுமுகவைநகர்க்கிறைவன்முத்துராமலிங்கவெழிலோன்வாழ்க.

சித்தர்களும்யோகியருஞ்சிறந்திலங்குதவத்தினருஞ்சிந்தித்தோரும்
பத்தர்களுந் திரிபுரஸுந் தரிபதமே கதியென்று பரவுந் தாயே
முத்தமருஞ் சங்கினங்கண் முரலுமுகவைப்பதிமன்முதல்வன்பாதச்
சத்தமரு மணிமுத்து ராமலிங்கச் சேதுபதி தழைக மாதோ. (6)

துங்கமுறு மாயிரத்தெட்டிதழ்க்கமல நாப்பணுறுஞ்சோதியாள்வாய்
சங்கமுறுபுலவர்கலிக்கிரவிமுனர்ப் பனிபோலச் சந்தார் கொண்மூச்
சிங்கமுத்து ராமலிங்கச் சேதுபதி செங்கோலன் செவ்வி வம்சம்
புங்கமுற நீடூழி நீடூழி பொலிந்துநனி வாழ மாதோ. (7)

இடகலைபிங் கலைமேவு சுழிமுனையி லிலங்குமதி யிரவி சூழுஞ்
சுடரிமிரு மணிமுடியி லமுதொழுகு ஞானவெளி துலங்கி யுற்ற
தடமுகவைப் பதியுய்யச் சார்ந்ததிரி புரஸுந்த ரியே தாயே
அடலயில்வேற் சிராச னீடூழி வாழஉன தருள்செய் வாயே. (8)

ஆகச் செய்யுள் 99.

## வேம்பத்தூர்
## சௌந்தரபாரதிகள் பாடியவை.

புவியாதி புவனங்கள் யாவும் படைத்தருள்செய்
போதன்சொல் புனித வேதப்
பொருளினுக் கெட்டாத தாய்நிரா லம்பமாய்ப்
பொருவின்முக் குணர கிதமாய்க்
குவியாத வாசாம கோசரம தாகிநூல்
கூறவத் தாதீதமாய்க்
கோதற்ற தத்துவங் கட்குமே லாய்மகிமை
குலவுமெய்க் கருணை வடிவாய்ச்
செவியார் மனத்தவத் தோருமுணர் வருசச்
சிதானந்த வுருவின் மயமாய்த்
திகழ்ந்திருந் தருள்ராஜ ராஜேச்வ ரீயுனது
சேவடியை யெண்ணி யொருநாற்
கவியாதி நூறெளித் துலகையாண் முகவைவாழ்
கனமுத்து ராம லிங்கக்
காவலன் செங்கோ றழைத்துச் செழித்திடக்
கருணையுட னருள்பு ரிவையே. (1)

### வெண்பா.

பூவருமை வண்டறிதல் போன்மதுரச் செந்தமிழின்
பாவருமை தேர்முகவைப் பார்த்திபா—மேவுமலை
மாதுபதி யைப்போற்றி வாழுமுத்து ராமலிங்கச்
சேதுபதித் தென்னு ஜெயம். (2)

ஆகச் செய்யுள் 101.

---

## வேம்பத்தூர் பி. மகாதேவய்யர் பாடியவை.

பூதலத்தின் மீதுபுக ழோங்குமுக,வாபுரியிற் பொருந்து மன்னே
சீதமலர்க் குழலுமையே ராஜரா ஜேச்வரிமா தேவி யுன்றன்
பாதமலர் தொழுமுத்து ராமலிங்கச் சேதுபதி பண்பாய் நாளு
நீதமுடன் மகபதிக்கொப் பாயரசு செய்யவரு ணீசெய் வாயே. (1)

வேறு.

செந்தா மரைவதனச் செல்வி திரிபுரையா
மெந்தா யிராஜரா ஜேச்வரியே—ஸந்தானம்
சேருமுத்து ராமலிங்க சேதுபதி யின்செங்கோல்
பார்முழுது மோங்கிடக்கண் பார். (2)

பூதலத்தி லுள்ள புலவோர் தமையெல்லா
மாதரித்துக் காத்தருளு மன்னவனே—நீதமுடன்
சிங்கா தனத்தரசு செய்யுமுத்து ராமலிங்கத்
துங்காவெந் நாளுஞ் சுபம். (3)

செல்வத்தாற் கீர்த்தியினாற் சிந்தைமகி ழச்செய்யுங்
கல்வியினாற் செவ்விமிகுங் கன்னனே—தொல்லுலகில்
நாவலர்கண் ணன்னமுத்து ராமலிங்க பூபனிற்கோர்
காவலவ ரும்பிணியா கார். (4)

பூங்கா ருலவும் பொழில்விண் ணவருலகின்
பாங்கார் முகவைப் பதிக்கரசே—நீங்காத
புண்ணியனென் றோதும் புகழ்முத்து ராமலிங்கத்
திண்ணியவேல் வேந்தே ஜெயம். (5)

பூமன்னர் வந்துபணி பொற்கழலான் பூவையர்கள்
காமனெனப் பின்பற்றுங் கட்டழகன்—தாமமணி
மற்புயன்பொன் னார்முகவை வாழ்முத்து ராமலிங்க
விற்பனன்செங் கோல்தன்ழைக வே. (6)

விண்டபல வின்சுவைக்கு மேலாகத் தித்திக்குந்
தண்டமிழாம் பைங்கூழ் தழைத்தோங்க—கொண்டவட
மேருமலை யைப்புயத்தால் வென்முத்து ராமலிங்கக்
காருலகிற் பெய்ததுபொன் காண். (7)

வேறு.

பூவிற் சிறந்த புகழ்சேர் முகவா புரிக்கிறைவன்
காவிற் சிறந்த கொடையா னுபர்பாற் கரனருள்செய்
கோவிற் சிறந்த குணவான் பகைவர் குலைந்திடச்செ
யேவிற் சிறந்தமன் னன்முத்து ராமலிங் கேந்திரனே. (8)

வேறு.

பூவனைத்துந் தன்னிடத்துப் பூத்த கொடியிடைநற்
றேவர்தொழும் ராஜரா ஜேச்வரியின்—மாவருளால்
மந்தாரத்தை யொத்தபுய மான்முத்து ராமலிங்க
சுந்தரா நாளுஞ் சுபம். (9)

ஆகச் செய்யுள் 110.

---

திருச்செந்தூர்

## அஷ்டாவதானி மஹாதேவையர் பாடியவை.

தேடற் கரிய செழுந்திருவே திருவுட் டெளிவே தெளிந்ததமிழ்ப்
பாடற் கனிவே கனிப்பொருளே பரனார் பாகத் தமர்சிவையே
ஆடற் பரியி னடிச்சதங்கை யதிர்கேட் டமரர் மகளிர்குழை
நீடற் புதத்து முகவையிறை நிறைமெய்ந் நலங்க ளுறவருளே. (1)

வேறு.

சீராஜ ராஜ மகிபால நிற்குச் சிவையருளால்
பேராத மாநிதி புத்திர ரீயும் பெருமகிழ்வு
நேராரை வெல்லும் புகழ்ஞான மன்பு நிலைத்ததிடம்
பாராத லாதி மிகவோங்க வாழ்தி பலவுகமே. (2)

வண்ணம்.

சீருறு மாமறையோர்—பலர்
வேள்விக ளேசெயுமா—றுளிர்
வத்துமிக்கநி றைத்தவர்க்களி கைத்தலத்தனெ ழிற்கவிவாண
ரானவர் சேர்கலியா—மிரு
ளோடவு நாண் முகமா—மவிர்
புட்கரத்தைய லர்த்துமர்க்கனி டத்துதித்தமெ யிப்புவிமீது
சேயிழை நாயகியோர்—விழை
வான்மறு மாதரையா—யென
வுட்பதிப்பவ னெத்திசைக்கணும் வைத்தவெற்றியன் மிக்கவரோத
வணிகமீ தேறி வீதி வரு வில்வேள்—

தேவர்க ளுபகனு—மயி
லூர்தர நீடமர்வா—பசு
ரக்கடற்படை யட்டவித்தக னைத்துதிப்பவ னித்தமுமோர்சிசா
ருவுரை யாளன்வலா—னிகல்
வார்முடி காலெறிமா—வணி
யிற்பெருத்தவன் முத்தமிழ்க்கிறை தத்துமத்திமி குத்திமிவாயில்
சேர்திறை யாளரையா—அதி
தீரன ராவிறைநேர்—மதி
மெச்சமைச்சர்கள் சொற்றவத்தினர் சுற்றிடப்பெறு முத்தமநேய
னனகனு னுதவாழ்வு பெருகு சேய்— ௨

தாருறை மார்பினன்வான்—மதி
மூவிசை சார்தருகோ—விழை
சற்குணத்தவ னத்துவத்தினி றுத்துபுத்திபன் முப்பொருள்வேலே
யாமென வேதெரிவால்—விரி
போதவி லாசனெலா—வுயிர்
கட்குநற்றவை யைப்பெருக்குமி னக்கமுட்டிகழ் கொற்றவன்விர
சால்பின னரணிபூ—சையை
நான்முறை யேசெய்துநா—னவ
முற்றவப்பொனி சைத்தசிற்கிரு பைத்தனிக்கல னைத்திருமேனி
யணிகொள்சிராச ராச னிறைவர்கோ— ௨௩

தாமர மாழமதா—பகல்
சாகர மேய்தடவாய்—குடை
பக்களிப்பொடு வெற்பினிற்றழை யற்புதத்தன வெற்பரிமாதர்
பானடை தேரவரா—விற
கோதிம மாகர்சிறார்—கிளி
தத்திருக்கினை நத்திபற்பொழி விற்சரிப்பர்ந டத்ததிர்மீறு
தாண்முழ வாலடன்மா—சுனை
மாவிடி யேறிதெனு—கிலே
தத்துமற்புய ரைப்பினக்கவெ றுத்தமுத்தணி விற்பிரள்வீதி
அழகுகூர் மாடமேய முகவைபாய்— ௩

வாருடை மாமுலையார்—சில
ரோடுகு லாவிமுனு—ளரி
யத்தமிப்பதன் முற்றருக்கிளர் வட்டமிட்டவி ருட்செறிசோலை
போயிவ ரோர்சிறையாய்—மல
ரீர்தர வேதனியாய்—விட
வப்பிறப்பின ருச்சனைப்பயன் விட்டிடத்தரு விற்கடிநாறு
வாளுதிர் பூநிமிர்கோ—டதி
ஞடிடு வேனெதிரே—யணி
சித்தசற்குரு வைக்கொடுத்துவி டுத்ததொத்தவன் மைக்கணேமோத
மணியின்மான் மாரனுகு மொருவனே— இரு

வாலிப னேயெனலாம்—வய
தோர்பதி னுறுடையான்—மெயி
லக்கணத்ததி ரட்டியுற்றவ னச்சமற்றெனை நட்புறுதோழி
யார்கொலெ னுமொழிவான்—மிசை
யாசையி லாதவள்போ—லட
துட்டநிற்றியெ னச்சிரித்தடி யுட்கருத்துமு கக்குறிகூறும்
வாவென வேதொடலால்—விளை
மோதமு மோகமுமா—யசை
வற்றவெற்கொடு சித்திரத்திலை கட்டிடத்துளி ணைக்கைமெய்சூழ
வலியவே யாகமார்பு தழுவவே— ஓ

ஊருவொ ருநஞ—வித
மூறமு தேபெறுவா—னவ
னுச்சியிற்குழ லைத்திருத்தின னிட்டபற்குறி யிற்புளகேற
முசுப யோதரமே—வெகு
பூரித மாநெறியே—யிறு
கப்பிடித்தன னப்பிடிக்குள கப்படுத்துக துப்புணலாவ
தோதும ளவலவே—பக
நீவிய மாசுகமே—யுட
லைக்கலத்தனு முட்டிடச்சுர தப்பெருக்கமு டைத்தவிழ்போது
தணிவிலா மோத வாரி நிறைவதே— ஓரு

பூகைகொள் வேளொடுமே—ரதி
தானுமி வாறசையா—டிரு
வுக்கு மிக்கனி யைச்சுமப்பரி திச்சரித்திர நிற்கவனே
யானிசை வேசெய்ததா—லினி
நீயிது வேபுரிவாய்—அனே
யைத்தனித்தழை முற்றவட்குரை மற்றவர்க்கும றைத்துவிளாக
வூதிய மேயுறுமா—றித
னலடி யேசகியே—ய்த
னைச்சிறக்கந டத்தியெற்கும னத்திருத்திநி லைக்கவைவாழி
சாதமேயாகு மீது நிலைமையே— (3)

தோங்கற்றுழிசை.

அணிகமீ தேறிவீதி வருவில்வே
ளனகனு னதவாழ்வு பெருகுசே
யணிகொள்சி ராசராச னிறைவர்கோ
வழகுகூர் மாடமேய முகவையாய்
மணியின்மான் மாரனுரு மொருவனே
வலியவே யாகமார்பு தழுவவே
தணிவிலா மோதவாரி நிறைவதே
சாதமே யாகுமீது நிலைமையே. (4)

ஆகச் செய்யுள் 114.

---

வேம்பத்தூர்

## கோவிந்தையர் பாடியவை.

பூந்தருவி னீழற் புரந்தரன்வாழ் வுந்தொண்டர்க்
கீந்தருளும் ராஜரா ஜேச்வரியே—பாந்தளணி
நங்கோனைப் போற்றுமுத்து ராமலிங்க பூபதியின்
செங்கோ றழைக்கவருள் செய். (1)

வேறு.

பூவின்வாசமிகு சோலைமேவுமுயர் பூகமீதுகப ருவியொண்
பொற்பழத்தினையு திர்த்துநற்புனல்கொள் புட்டடத்திடை புகுந்திடும்
மாவினைறுகுயில் பாடுமாறுமயில் வாகினுடுவள னுர்முக
வைத்தலத்தினிலு தித்தமுத்தநகை மத்தகத்தினிக மங்கலை

யேவினைர்நயனி ராஜராஜபர மேஸ்வரிவளர்த பாகரீ
இட்டம்வைத்தனது பத்தனற்றவமி யற்றுசற்குணமி சைந்தவ
னுவினையகொடை ராஜராஜனிறை யாயுளாயரசு மேசெய
வற்புமிக்கருள்செய் வெற்பினுக்கிறைவ னற்புதப்புதல்வி யம்மையே.

வேறு.

சந்தானங் கிர்த்தி தனதா னியங்க டழைத்துநிறை
பந்தான மாமுத்து ராமலிங் கப்பூ பதிமுகினித்
தந்தானம் பெய்து புலவோர்க் கணிநிதி தந்திடவு
மிந்தா னரிராஜ ராஜேச் வரிவர மீந்தருளே. (3)

ஆகச்செய்யுள் 117.

---

## மதுரை சத்தியவாகீச்வரய்யர் பாடியவை.

பூவின் சுவையுணரும் பொன்னளிபோற் பாவலர்நற்
பாவின் சுவையுணரும் பண்பினன்—கோவினுயர்
சிராஜ ராஜன் சிறக்க வருள்புரிவாய்
மாராஜ ராஜேச் வரி. (1)

வேறு.

உலகுயிர்படைத்துப் பகுத்துணர்வுதவி யுளமுறு மழுக்கினையகற்றி
அலகிலாவருளினளிக்குமம்பிகைநின்னடிமலர்முடிமிசைப்புனைவேன்
கலகல வென்று நிதிப்பொதி குவித்துக் காவல ராவலிற் பணியும்
இலகுபொற்கழலான்ராஜராஜேச னிசைசிறந்தினிதுவாழ்கெனவே.

வெண்பா.

மாரி வளஞ்சுரக்க மன்னுயிரெல் லாஞ்சிறக்கப்
பாரினுயர் சேது பதிகுலத்துக்—காரணைய
மாராஜ ராஜ மகிபாநின் னாட்சிமுறை
சீராக வாழ்க சிறந்து. (3)

வேறு.

காரார் மலர்ப்பொழிற் செம்பிநன் னாடன் கலிகடியுந்
தாரா நகர்க்கிறை தன்னைவென் றோன்கொடைத் தன்மையினற்
சிராஜ ராஜ துரைசேது நாதன் சிறப்பினொடும்
பாராண் டழகுறப் பல்லாண்டு வாழ்க படிமிசையே. (4)

ஆகச்செய்யுள். 121.

பாண்டவர்மங்கலம்.

## சங்கரநாராயணபாரதிகள் பாடியவை.

புயல்காட்டும் பொலன்கரங்கள்புரவுபெறும்புலவருக்குப் பூகமேகுங்
கயல்காட்டுங்கனதடங்கால்வயன்முகவைகளிக்கவளர் கன்னிமார்க்கு
மயல்காட்டு மகலமணி மதனமுத்து ராமலிங்க மகிபநின்கோற்
செயல்காட்டு மனுநெறிநூற் றிறமன்றி மற்றுளதோ செகத்தின்மன்னே.

### வேறு.

கலைப்பாற் கடலயின்று காணவெளி யிட்டு
நிலைப்பா மலைவளரு நீதா—வுலப்பி
லெழிற்றேவை ராஜரா ஜேச்வரநின் செங்கோல்
செழித்தோங் குகபுவியீ தே. (2)

### வேறு.

பகரமார் மகரக்கொடியணி மலைப் பாண்டியன் பயந்திடு மகளாய்ச்
சகமெலாம் புகழ வொருதனிச்செங்கோ லுக்கியாண் டெர்ந்ததற் பரையே
நிகரிலாமுகவைநகரினன்னிதியோனினைத்தவர்க்குதவுபாற்கரன்றன்
மகனெனு முத்து ராமலிங் கேந்த்ர வள்ளலுக் கருள்புரிவாயே. (3)

ஆகச்செய்யுள் 124.

---

## திருச்செந்தூர் மு. கிருஷ்ணசர்மா பாடியவை.

சிந்தா குலமற்ற நற்றவத் தோர்தங்கள் சித்தமிசை
வந்தாசை யோடு வதியுங் கமல மலர்ப்பதத்தாய்
கொந்தார மார்புடைச் சீராஜ ராஜன் குலம்விளங்கத்
தந்தா தரித்திடு வாயுல வாத தயையினையே. (1)

### வேறு.

ஆகவத்துவி ருப்பமுற்றவ நேகவீரர்க ரங்களில்
ஆயுதம்பல தாங்கியேகவ சைச்சாரதியர் சூழ்வுற
ஊகமுற்றுள மேலைநாட்டின ரோர்ந்திபற்றுமின் விசித்திரயும்
ஒளிகொளத்தகை மின்விளக்குக ளுஞ்செறிந்துவி ளங்கிட

நாகலோகமு ளார்பொருந்திய நல்லவைக்குவ மித்திடும்
ராமலிங்கவி லாசவாஸக நடுவில்வீ ற்றுடு வைகிய
நாகரீகவி ராஜராஜர்க ணுபகன்புகழ் பாடிட
நாவிலாயிர மாயுளாயிர நாவலோர்பெற வேண்டுமே. (2)

வேறு.

சென்றே யழுதை யருத்திடுந் தாயினைத் தேடிவருங்
கன்றே யெனநின தாரரு ணுடிக் கனிந்துவந்த
குன்றே யெனத்திர டோள்சேர் முகவையிற் கோமகனுக்
கின்றே முருக வளிப்பாய் நினதரு ளின்னமுதே. (3)

சீரார் செயந்திப் பதியுறை வோய்நறுஞ் செங்கடப்பந்
தாரா நினதடி தம்மில் வழிவழிச் சார்புடையான்
காரார் முகிலும் வியக்க வளிக்குங் கரதலத்துச்
சீராஜ ராஜனுக் கெல்லா நலனுஞ் செழிக்குகவே. (4)

வேறு.

நீலமா மயின்மீ தடியவர் புன்க ணீக்கிட வருமுரு கோனைப்
பாலனு கப்பெற் றுவக்குமம் பிகையே பாற்கர சேதுபூ பாலன்
சீலமார் தவத்துப் பயனென வுதித்த சீராஜ ராஜவள் ளற்குச்
சாலநின் கருணை மழையினைப் பொழிந்து சந்தத மும்புரப் பாயே.

சநகரா தியருங் காணுதற் கரிய தாண்டவம் புலிபணிக் களித்த
கநகமன் றுடி தன்னுடற் பாதி கவினுறப் பெற்றமா தரசி
நினதடி மலரைக் கவிமல ரினுந்தே னிறைமல ரினும்புனை ஞாந
திநகர னனைய சீராஜ ராஜன் செயமெலாம் பெறவருள் வாயே. (6)

கொந்தலர் குவளை மார்பினி லணிந்த கொற்றவைவிமலையம்பிகையே
சிந்தையிற்கலைதேர றிஞர்களென் னுஞ் சிகியினங் களிமிகப்பொங்கச்
செந்தமிழ்ப்பயிரை யன்பெனும்புனலிற் செழிப்புறவளர்க்கநன் முகவந்தசீ ராஜ ராஜனு மேகம் வாழிய நீடுவா ழியவே. [வை

வேறு.

பொங்கேர் வளன்பெறு பூஞ்சோலை யார்புது வைப்பதியிற்
சங்கேய் கரத்தரி தன்கலை பாவையுஞ் சார்ந்திலங்கப்
பங்கே ருகத்தவன் சீராஜ ராஜற் படைத்திலனேல்
எங்கே கவிப்புல வோர்சுக மாக விருப்பதுவே. (8)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனு.

தகையுற் றகருப் புவிலிற் குசுமச்
சரம்வைத் துலகைத் தருகொற் றவையோ
தலைமைப் படுவித் தையளிக் கையினிற்
றவளக் கமலப் படிவத் தினளோ
சரணுற் றவருக் குநிதிக் கொடையிற்
றழலொத் தநிறத் தைவகிப் பவளோ
சதியுற் றெதிர்பற் றலரைத் தெறலிற்
றகுபச் சைநிறத் துவனப் பினளோ
தனதொப் பிலடித் துணைநட் பையுறிற்
றனிமைக் கதியைத் தருசற் குணியோ
சலசத் தினையொத் தமுகத் திலவிக்
தளிரொத் தகடைக் கணையுற் றவளோ
சமரிற் கருமைப் பகடிற் றுமணிற்
சரியக் கணைதொட் டகரத் தினளோ
சகவத் துவனைத் தழிகற் பமதிற்
றளர்வற் றகனிப் பருவத் தினளோ. (வ)

உகிரொற் றையினிற் கறுவித் தமருக்
குறவற் றவரைச் செறுநிட் களையோ
உனதப் புதுவைப் பதியைத் திகழ்வித்
துவமைப் பொருளற் றவிரத் திநமோ
உரிமைத் தவமுற் றுமியற் றரசுக்
கொருவிக் கிரமற் றுயர்விப் பவளோ
உலகத் துயர்பட் டுவிழிப் பவருக்
குவகைக் கடலைத் தருநிற் குணியோ
உறுதிப் படுமுத் திவிருப் பர்மனத்
துறை யற்புதசித் திரவிக் ரகியோ
ஊனுற் றகவிப் புலவர்க் கிதயத்
துறுதுக் கமகற் றினனற் பயனே
ஒளியைத் தரிசித் ததவத் தர்மனத்
துலவிப் பதிவுற் றபதத் தினளோ
ஒருபத் தெனுநற் பகலுற் சவவற்
புறுகொற் றவனுக் கொருயிர்த் துணையோ. (இ)

அகிலைச் சடையிற் புனையத் தனைமிக்
கடுகற் றொழிலிற் புகுவித் தவளோ
அரவப் பகையிற் றுவசத் தனனைத்
தகிலத் திதியைச் செயவைத் தவளோ
அவிர்நற் கமலத் திவிருப் பவனுக்
கதிகப் படுசிட் டியளித் தவளோ
அசுரக் குலமுட் கவழற் கணைவிட்
டரியைப் பரியொக் கநடத் தினளோ
அறமிக் கமனத் தொடுபத் தியியற்
றரசுக் குமகிழ்ச் சிவளர்ப் பவளோ
அழலொத் தபவத் துவெயிற் படுநர்க்
கடர்வுற் றநிழற் றருகற் பகமோ
அகமற் றவுளத் துமறைக் ககநக்
தரிசிற் றுலவித் திரிநற் குயிலோ
அலர்வுற் றமனச் சுகமொத் தவருக்
கருள்பொற் கமலச் சரணத் தினளோ. (௫)

எகிநத் துறைவித் தகனுக் குமறைக்
கெளிதிற் பொருள்செப் பியவற் கனையோ
இதமுற் றதுயர்க் கடலிற் புதைபட்
டிடருற் றவருக் கொருநற் புணையோ
இதமற் றமலர்த் திருநற் பணிபெற்
றிமையப் படுநித் யசுகத் தினளோ
இசையுற் றடியைத் துதிசெப் புமவர்க்
கிருளைங் களைதற் கொருநற் சுடரோ
இயலிற் சிசியைத் தபைமொய்த் ததிருக்
கிணையிற் பிணையொத் தமடக் கிளியோ
இபமொத் தகவிப் புலவர்க் களிசெய்
திடுநற் றவருக் கொருபொற் குவையோ
இமமுற் றதிருக் கிரியிற் செனனித்
திறைவிக் கிறைவிப் பெயர்பெற் றவளோ
இசைசயத் திசையெட் டுநிறுத் துமணைக்
கிறைவர்க் கிறைவர்க் கருளுந் தமியே. (9)

### வேறு.

மந்திரப்பொரு ளன்குணர்ந்த வசிட்டனேநிக ரந்தணர்
மங்களச்செப முஞ்சிறந்துள மாமறைத்துதி யுஞ்செயக்
கந்துகத்தன பாரமுங்குளிர் கமலநேர்முக முஞ்சுவைக்
கண்டுநேரிசை யும்பொருந்திய கணிகைமாதர் நடஞ்செயச்
சுந்தரக்கந காலயத்துறை சுத்தநிற்குண ரூபிணி
சோதிரூபம னோன்மணிதிரி சூலிஞானச வுந்தரி
அந்தரத்துறை தேவருந்தொழ வரியநின்பத மேலவைமீ
தன்புமிக்கவி ராஜராஜனை யாளுவாயநு தினமுமே. (10)

ஆகச் செய்யுள் 134.

---

## அபிராமம் கார்மேகக் கோனார் பாடியவை.

பூந்தண் மலர்க்காப் புடையுடுத்துப் பொலியு முகவா புரிபுரக்கும்
புகழ்சேர்சேது குலவேந்தன் புனிதகுணத்தானருண்மனத்தான்
காந்தண் மலர்நேர் கரமாதர் காமுற் றடையுங் காமனருங்
கவிஞர் தமக்குக் கனகநிதி களிப்போ டளிக்கு மெழிலிபனுன்
பாந்தண் முடிசேர் புவியரசர் பரவும் ராஜ ராஜவள்ளல்
பலவும் படைத்துப் படிபுரந்து பன்னு ளோங்க வருளுதியால்
தேந்தண் மலர்நேர் பதயுகளச் செல்வி யரனுர் மனமகிழுந்
தேவி தேவை யரையாரண் மனைசேர்ந் திலங்குந் திரிபுரையே.

### வேறு.

புடைபரந்தகட லாடைசூழ்புவனி யாவுமேவுபுப பூதரன்
போஜராஜனிகர் போதமேவுபுல வோர்கள் சூழுமரி யாதனவ்
நடைசிறந்தமனு நூலின்மேதினி நடாவவேதினமு நாடியோன்
நாதனுனதிரு ராமநாதபத நாளுமேவருமுடி சூடியோன்
கொடைசிறந்தமஹ ராஜராஜமுகில் கோதிலாதவரு ளாகரன்
கோலுமாழியுமொ ரூழிகாலம்வரை கோடுறாதுநிலை யாகவே
படைசிறந்தகர மாரிவீரியெரி பாலலோசன சதாசிவன்
பாகமேவுதிரி சூலிநாரிதிரு பாகரியருள்க நீலியே. (2)

வேறு.

சந்திர மௌலி தாங்குஞ் சதாசிவன் பாகத் தாருஞ்
சுந்தரி யருள ராஜ ராஜநற் றுரையே வான
விந்திரன் போல முன்னூன் மனுநெறி முறையே யிங்குத்
தந்திர வமைச்ச ரோடுந் தரணிகோ லோச்ச நன்றே. (3)

வேறு.

பஞ்சலட் சணவிலக் கியபார காவியம் பலவும் படித்துணர்ந்தோன்
பாரதின் புயவேளி ராஜரா ஜேஸ்வரன் பலவுலகு தொழுசேதுமன்
பகருந்த யாளகுண சுமுகனா னடிதொழும் பத்தியா னுயர்புத்தியான்
கிஞ்சுக நிகர்த்தசொன் மடவார்கள்மயலுடன் கிழியெழுதுகின்றவெழிலான்
கீதவாத்தியவிநோதன்கோடிகாவலன்கேடினற்றமிழ்நாவலன்
கிளருமரி யாதனத் தான்கந்த மாதனத் தான்கவிக் கேதனத்தான்
மஞ்சுசெறி சோலைசூழ்தேவைநக ராதிபதி மகிதலமளிக்கும்வள்ளல்
மாகம் பராவுதரு புகழினன் றளவநன் மாலையணி புயபூதரன்
மருவுமிரணியகெர்ப்ப யாஜிரவிகுலமுத்துவிஜயரகுநாதமரபோன்
எஞ்சுதலிலாதநற்கல்விவய திருநிதியொடிறைமையும்முறைமையுறவே
எற்றமுறுபர்வதகுமாரியைக்குமரனைமு னீன்றதற்பரையைஞான
மிலகுமடியார்க்கிதந்தருமருந்தைப்பணிந்திதயமுறவாழ்த்துவோமே

வேறு.

பிரசங்க மாரி பொழிபாற் கரன்றவப் பேற்றி னுற்றோன்
அரசங்கம் யாவு மமைந்த பிரான்றமி ழாரணங்கை
வரசங்க மேற்றி வளர்ப்பவன் றேவை வளநகரான்
கரசங்க மாறுங்கை நின்னடி யானவற் காத்தருளே. (5)

பாவேந்தர் தங்கண் மிடிதீர நல்கும் பரிதிகுல
மாவேந்து காந்து மணிப்புயத் தான்கொற்ற மன்னவர்தங்
கோவேந்து கோனுடன் பல்லூழி யாழி குலவவருள்
காவேந்து தென்முக வாபுரி மேவுங் கயற்கணியே. (6)

வழுதியர் கோன்வளர்த் தேயுவந் தாண்டவிவ் வண்டமிழைப்
பழுதில் வகைபுரிந் தார்சேது வான்குல பார்த்திபரத்

தொழுதகு மாமர போன்ராஜ ராஜ சுமுகனிவற்
கெழுதரு மாமன்ற யின்மேவு தேவி யிதந்தரவே. (7)

## வேறு.

சிதமாமதி போலநிலாவிய தேசுராஜசி காமணி தேவையன்
சேதுராஜகு லாதிப னேருறும்—ஜெயமாது
சேர்புயாசல வேள்மதவாரணஞ் சேர்சமுகசே னுபதிமாபதி
சேனுலாவரு மாகவிகேதனன்—ஜெகவீரன்
போதவேதிய ராசியினுயர் பூமியோர்தவ மாகியநீதிமன்
போதுமேவிய மாதருண்மேயவன்—புலவோரின்
போகவேமிடி யார்நிதியேதரு போகபூமியி னோர்தருவானவன்
போதுசேர்தள வாரவரோதயன்—புவியோர்தம்
காதுமாபெரு பாதகம்வேறுசெய் காசில்சேதுத் ராபதியேசறு
காவலோர்பணி பாதசரோருகன்—கவிராஜன்
காவிகேதன மாதிபதாகையன் காருலாவருமால்பொதியாசலன்
தலாருமை பாகனை யேதொழு—கனயோகன்
தீதிலாதபே ராயுளனுகவெண் டோளிபாலவி லோசனிதேவிவன்
தியமாமகி டாசுரகாதகி—திரிசூலி
தேனளாவிய தாதகிசேர்நறு சிர்சடாடவி தேவசிகாமணி
சீலநாயகி தாயகியேயருள்—புரிவர்யே. (8)

## வேறு.

பூதலத் தோர்தொழுஞ் சேதுநன் னுடன் புலவர்தமைக்
காதலித் தாள்பவன் கன்னவு தாரன் கனகமணி
யாதனத் தான்முத்து ராமலிங் கேந்த்ர வரசர்பிரான்
மாதனங் கல்வி வயதோ டிதம்பெற்று வாழியவே. (9)

## வேறு.

திங்கட் குடையுடைய சீராஜ சேதுபதி
தங்கள் குலச்சுடரே தார்வேந்தே—பொங்கியசீர்ப்
பொன்னா மகுடப் புரந்தரனே போலுலகி
லென்னாளும் வாழ்க வினிது. (10)

வேறு.

பூங்காவிக் குடையுடையான் பொறிபாடுந் தொடையுடையான்
    பொலன்றிண் டோளிற்
றூங்காவிக் குவலயத்தைத் தனிபுரக்கு மாற்றலினுன்
    றன்ம மாது
நீங்காவி தரணனெறி நீங்காத செங்கோலா
    னிலைபெற் றோங்கித்
தேங்காவி வளமுகவைச் சீராஜ' ராஜமுகில்
    சிறக்க மாதோ. (11)

கொற்றவையா ணடஞ்செய்புயக் குலவரையின்
    பாற்கரப்பேர்க் கோமான்செய்த
நற்றவத்தால் வந்தமுத்து ராமலிங்கேந் திரதுரைமால்
    நலமுற் றோங்கச்
செற்றமுறு மாமகிடா சுரற்செற்ற செல்வியரன்
    றேவி நன்கு
கற்றவர்தம் மனமகலாக் கற்பகமே நீகடைக்கண்
    கணிப்பாய் மன்னே. (12)

வேறு.

அரசெலாம் வந்துன் னடியிணை வணங்க
    வமரர்தங் கோவென விருந்து
புரசைவெங் களிற்றோ டிரதமும் பரியும்
    பொங்குநற் செல்வமு மார்ந்து
விரசுபொன் மணிசேர் பூங்குடை நீழல்
    வீற்றிருந் தவனிகோ லோச்சிப்
பரசுறும் ராஜ ராஜநற் றுரையே
    பன்னெடுங் காலம்வா ழியவே. (13)

வேறு.

தன்னடை கண்டுல கோர்பயி லும்வகை தானடக்கும்
மன்னடை யார்புரஞ் செற்றவன் பாத மலர்மறவான்
தின்னடை வாயு நுகரற வோருறை தேவையினன்
நன்னடை மெல்லியர் வேள்ராஜ ராஜ நராதிபனே. (14)

காவைத்த வொண்கொடைக் கையுடை யான்பெருங் காசினியோர்
நாவைத்த வண்புக ழான்செம்பி நாட்டு நராதிபன்காண்
கோவைத் துறைபல கொண்ட குலாதிபன் கோதறுசீர்த்
தேவைத் தனிநக ரான்ராஜ ராஜ ஜெயதுங்கனே. (15)

வேறு.

அளிகோடி யிசைபாடு தளவார மணிமேரு நிகர்தோளினான்
களியீகை பொறைசீல நிறையாதி குணமேவு கலைநாவலோன்
தளிர்நேரு பதமாதர் மதன்வேத விதியோடு தரையாள்பவன்
ஒளிர்தேவை நகராதி பதியாயுள் பலவாக வுலகாளவே. (16)

வேறு.

பொன்னுரு மணிமகுடப் புரந்தரன்றன் களிற்றின்மிசைப் போய
நன்னய கன்முத்து ராமலிங்க சேதுபதி நயப்பிற்சென்று [தென்ன
தென்னுரும் வன்னிதனை யம்பெய்து வந்தபெருஞ் சிறப்பை முன்ன
ரென்னுளில் யார்கொண்டா ரவனிமீ தவன்பெருமை யியம்பற்பாற்றே.

வேறு.

புண்ணியமே வுஞ்சேது பூபாலன் மாராஜ
கண்ணியவான் ஞானக் கலையுணர்ந்தோன்—என்னுபுகழ்
இந்திரனோ லக்கத் திருந்ததென விம்முறையே
சந்ததமும் வாழ்க தழைத்து. (18)

ஆகச்செய்யுள் 152.

---

வேதாரண்யம்

க. சோமசுந்தர பண்டாரமவர்கள் பாடியது.

திங்களணி செஞ்சடிலத் தேவன் றிருமனையாள்
துங்கமலர்ப் பாதந் தொழுமன்பன்—பொங்குபுகழ்
சேர்முத்து ராமலிங்க சேதுபதி வேந்தர்பிரான்
ஏர்பெற்று வாழ்க வினிது. (1)

ஆகச் செய்யுள் 153.

---

ஸ்ரீ

# சேதுசம்ஸ்தானம் பிரமாதீச ஷூல

வேதாரண்யம் பிரதோசமடாதிபர்

யா. சோமாஸ்கந்தபட்டாரகர் பாடியவை.

புன்னாக மலர்வாச மலிதேவை நகரிற்
பொருந்திய விராம நாதன்
புடைவாழி மாசலப் பூங்கொம்ப ராமம்மை
பொன்னடித் திணைய யுன்னி
யென்னாளு மேத்தித் தொழும்புசெய் தூயவன்
எதிரிலாப் ப்ரபல தீரன்
இணையில்கலை வாணிபல ரூபமொடு வாழ்வதென்
வெண்ணிலாக் கலைஞர் கூடித்
தென்னாரு நற்ப்ரசங் கம்பொழிந் தோங்கிவளர்
செந்தமிழ்ச் சங்க மேவுந்
தெய்விக மாமுகவை யம்பதிக் கிறையவன்
சிராஜ ராஜேஸ்வர
நன்மை சேதுபதி நாடுமேன் மக்களுட
னயமேவி யோங்க வாணி
நலமாது செய்மாது புவிமாது மகிழ்வெய்த
நாடோறும் வாழ்க வினிதே. (1)

சீர்மல்கு தென்றமிழ்ச் சயிலமுனி தங்கிவளர்
தென்னாட்டின் மேன்மை யுளதாய்த்
திகழ்சேது யாத்திரைச் செல்வர்கட் கப்பயன்
சேரப் பொருத்து தலமாய்
நீர்மல்கு சாமனே யருள்ராஜ தானியான்
நிகரிலாச் சுகுண சீலன்
நேமிபுகழ் பார்க்கர் தயாநிதி பெருஞ்செல்வ
நிருபர்குல சிந்தாமணி
பார்மல்கு முலகாதி பெற்றளிக் குந்தலைவி
பகவதி யிராசேச்வரி
பதயுகள மெக்கால முக்கால மேத்திடும்
பண்புப் பெருக்க வருளாற்

காார்மல்கு கொடையறிவு கல்விமுப் பொருளுண்மை
காட்டுமா ராய்ச்சி யுடனே
கனமேவு ராசரா சேசுவர சேதுபதி
கவின்மேவி வாழ்த மாதோ. (2)

ஆகச் செய்யுள் 155.

---

இராமநாதபுரம்

## விஜயன் சேருவைகாரர் பாடியவை.

பூவிற்சிறந்தொளிரு முகவையம்பதியினர்கள்புண்ணியத்தானன்புசேர்
பொற்பினெடுபுவியாளுகின்றவடிவேலனிகர்புரவலன் கருணாகரன்
தேவிற் சிறந்திலகு தேவையம் பதிமேவு ஸ்ரீராம நாத னருளே
ஜெயமுறுதுஜாசமுகரெனவேவழங்கிவருசீர்வளந்தருமாவையான்
ஏவிற்சிறந்தவிழிவனிதையர்களெஞ்சநிறைபெழிலிலகுதிர டோளினு
னேற்றமுறு மூவர்தந் தேவார முன்றெரியிராஜராஜச்சோழனேர்
நாவிற் சிறந்தசெந் தமிழ்மாது நிலைசெய்த ராஜரா ஜேச கோமான்
நலமருவி யினிதூழி யுலகாள வருள்புரிதிராஜராஜேசுவரிபே.(1)

வேறு.

கண்கண்ட புண்ணிய மென்னக் கவின்கொண்ட காவலவன்
மண்கண்ட புண்ணியத் தின்புசெய் தாண்டருள் மாதவன்றீம்
பண்கண்ட சொல்லியர் மாமதன் தோத்ரம் பகைளுருஞ்செய்
திண்கண்ட தோள்ராஜ ராஜேசன் வாழ்க திரிபுரையே. (2)

வேறு.

ஞாலம் புகழ்முகவை நாயகன்றன் னாடெங்கும்
காலமழை தான்பொழிந்து கார்செழிக்க—கோலமுறும்
ஸ்ரீராஜ ராஜேஸ் வரியருளாற் சீர்பெறுக
மாராஜ ராஜேஸ் வரன். (3)

வான மழைபொழிய மாண்புமிகுஞ் சேதுசமஸ்
தானந் தழைகெனநின் றாள்பணிந்தான்—மானேயெழும்
ஸ்ரீராஜ ராஜேஸ் வரனீ திருவருள்செய்
மாராஜ ராஜேஸ் வரீ. (4)

வே று.

விண்ணூரும் பொழில்புடைசூழ் முகவை யாளும்
வேந்தரரண் மனைத்தளியின் விமலையென்றே
மண்ணுசை பெண்ணுசை மூன்றுந் தீர்ந்த
மாதவத்தோர் தொழுதிறைஞ்ச மகிழ்ந்து வைகும்
பண்ணூர்ந்த நிகமமுமா கமமுங் காணுப் பதயுகள திரிபுரசுந்
தரியே பண்பேணு
டெண்ணூர்ந்த தமிழ்மகிப னிராஜ ராஜற்
கென்னலமும் பெறவருள்செய் திரட்சிப் பாயே.

ஆகச் செய்யுள் 160.

---

இராமநாதபுரம் சம்ஸ்தானம் பென்ஸன் ஹெட் அக்கவுண்டெண்ட்

சோமசுந்தரம்பிள்ளை பாடியவை.

தேன்பொழியும் பூம்பொழில்சூழ் தென்முகவை மன்னவனே
வான்பொழிதல் போற்பொன் வழங்குவனே—கான்பொழியுஞ்
செந்தா மரைத்திருவாழ் சீர்மார்பா சேதுபதி
சந்ததமும் வாழ்வாய் தழைந்து. (1

வாணீட்டிப் போர்புரியு மன்னர் மணிமுடிமேற்
றுணீட்டி வீற்றிருக்குந் தார்வேந்தே-சேணீட்டுஞ்
சீர்க்கருட கேதனத்தாய் சேதுபதி நின்னருளைக்
கார்க்கொடைபோ லீவாய் களித்து. (2)

பென்ச னளித்த பிரபலனே சேதுபதி
யென்சலன நீக்கு மிராஜபதி—நின்சரணங்
கண்டு வணங்கிக் கவிதிரச் சென்னிமிசைக்
கொண்டவெனக் கின்பவருள் கூர். (3)

இல்லையென்று நின்பா லிரப்போ ரகமகிழ
வெல்லையில்லா தேபளிக்கு மேந்தலே—நல்லவெழின்
மங்கையர்நெஞ் சங்கவரும் மன்மதனே சேதுபதி
யிங்கிதமுற் றெற்கருள்வா யே. (1)

வேறு.

சீர்மலிந்த கமலமலர்ச் சிறீதேவி யனுதினமுஞ் செறிந்தி லங்கும்
ஏர்மலிந்த தென்முகவை யிறைராஜ ராஜேச னினிதா யென்றும்
பார்மலிந்து வாழ்கவருள் பராபரையே திரிசூலி பணிவோர் தம்முன்
ஆர்மலிந்த ஞானமதை யறிபவழி புகட்டுவிக்கும் அருமைத் தாயே.

உலகமெலாங்காத்தருளுமுமையவளே திரிபுரையேயுவந்து நின்றன்
நலகமென நினதிருதாள் நயந்துமிகப் பணிந்துவரு நரேந்த்ர னெனு
திலகனெனும் மான்முத்து ராமலிங்கச் சேதுபதி சித்தி தம்போ
லிலகுவதா யெவ்வெவையும் முடிக்கவரங் கொடுக்கணித்தே யினியாள்வாயே.()

வேறு.

சேது பாதத் திரிபுர சுந்தரி
பாது காப்பை பரிவுட னாழ்வரை
சேது காவல ராஜரா ஜேசனைப்
பூதலத்திற் புகழுடன் வாழ்கவே. (7)

வேறு.

நீதிபதி யாதிபதி நேயபதி யான
சேதுபதி மாலையை செய்பபதி யென்றும்
மேதினியின் வாழ்கமிக மேருதனு வீசன்
பாதிமலி பார்வதி பரிந்தருள்செய் வாயே. (8)

அஞ்சலென அன்பினரை யாளுசிவ காமி
தஞ்சமென நின்றனடி சார்ந்துபணி வோனும்
மிஞ்சுபுகழ்ச் சேதுபதி மேதினியி லென்றும்
மஞ்சர்மனை யாருடனே வாழ்கவருள் வாயே. (9)

வேறு.

திங்களணிந் தோனோர் திரிபுர சுந்தரிநின்
செங்கமலப் பாதந் தெரிசனைசெய்—திங்கிதங்கொள்
சீலராஜ ராஜேச சேதுபதி யெப்பொழுதும்
ஞாலமதில் வாழ்கவரு ளல்கு. (10)

சங்குளனு நான்முகனுஞ் சண்முகனு மிந்திரனும்
ஐங்கரனு நின்றனடிக் கன்புசெய்த்—தங்கமிழை
சிங்கமதிற் றங்கிவருஞ் சிற்பரையே சேதுபதி
மங்களமாய் வாழ்கவருள் வாய். (11)

ஒருவரெதி ரில்லா துலகமெலாம் போற்ற
வரும்ராஜ ராஜேஸ் வரியே—தருமநிறை
நீதியுட னென்றுங் கிருபமுத்து ராமலிங்கச்
சேதுபதி வாழ்கவருள் செய். (12)

ஆகச்செய்யுள் 172.

---

## ஓரியூர் சர்க்கரைப்புலவர் பாடியவை.

பூவேந்தர் முடிவருடும் பொற்கழலான் செந்தமிழ்தேர் புலவர்க்கீயுங்
காவேந்துங் கையுடையான் காமனென வழகுடையான்காழிவேந்து
நாவேந்து தமிழ்கமழு நதியுடையான் செல்வமுத்து ராமலிங்க
மாவேந்தன் சிரஞ்சீவி யாய்வாழ வருள்ராஜேஸ் வரியாமன்னே.

வேறு.

கற்றுப் புலவோரைக் காதலித்துக் காத்தருளும்
நற்று யனையமுத்து ராமலிங்க—கொற்றவனை
எண்ணியவை தந்தா ளிராஜரா ஜேஸ்வரிநின்
கண்மணிபோ லெந்நாளுங் கா. (2)

உலகமெலாஞ் செங்காவி யோர்குடைக்கீழ்க் காக்குந்
திலகனெனுந் தேவைநகர்ச் செம்மல்—பலகலைதேர்
சியமுத்து ராமலிங்கச் சேதுபதி யைத்தேவ
நாயகியே காத்தருள்வாய் நன்கு. (3)

தாதுமிகு முல்லைமலர்த் தார்மார்பா தேவைநகர்ச்
சேதுபதி ராஜரா ஜேசுரனே—சோதிபெறுஞ்
சந்திரனுஞ் சூரியனுந் தாரணியி லுள்ளளவும்
இந்திரன்போ லின்புற் றிரு. (4)

வேறு.

புலவர்தன் றுயரந் தீர்க்கப் பூம்பொழின் முகவை வந்து
பலகலை யாவுங் கற்றுப் பன்மணி மகுடந் தாங்கித்
தலமெலாஞ் செங்கோ லோச்சித் தனியர சியற்றுமிந்த்ர
நலனுறு ராஜ ராஜ நரபதி வாழி மாதோ. (5)

வேறு.

சீர்கொண்ட தென்முகவை யரசுபுரி கௌமாரி
சிற்பரா நந்தி விமலி
சிங்கவா கினிதேவி ராஜரா ஜேஸ்வரி
திகம்பரி பதம்பணி குவாந்
தார்கொண்ட திண்புய னன்னசத் ராதிபதி
சதுரங்க சேனு பதி
சகலவினை தீர்க்குந் தனுக்கோடி யாதிபதி
தபோதனர்க் குதவு நிருபன்
பார்கொண்ட மண்டலிகர் வந்துதொழு கழலினன்
பன்னுளும் ராம நாதன்
பாதபங் கயமலர் சிரத்தினிற் சூடியிப்
பாரெலா மாணை செலவே
ஏர்கொண்ட சிம்மாத னத்திருந் தரசுபுரி
யிரவிமர புற்ற குணவான்
யெங்கெங்கு மிசைபரவு ராஜரா ஜேசுவர
னென்ஞான்றும் வாழ்க வென்றே. (6)

ஆகச் செய்யுள். 178.

---

இராமநாதபுரம்

## சிவஞானம்பிள்ளை பாடியவை.

சீர்மலிந்த வேணிபரை நிச்சலுமே போற்றிசெய்புஞ்
சீர்மலிந்த ராஜரா ஜேஸ்வரனே—பார்புரந்து
சுந்தரஞ்சேர் கந்தரத்துச் சோமனுர் தந்திடுநற்
கந்தனென வாழ்க களித்து. (1)

முன்னந் தமிழ்வளர்த்த மூவேந்தர் போன்றுலகில்
தென்னந் தமிழ்வளர்க்குஞ் சீமானே—நன்னலங்கள்
தங்குமுத்து ராமலிங்கத் தார்வேந்தே தாரணியான்
டிங்கிதமா நீவாழ்ந் திரு. (2)

வேறு.

சீர்மேவு தெய்வமறை யோதுபெரி யோர்களுந்
திகழ்சிவா கமத்தலைவரும்
செந்தமிழி னின்சுவை தெரிந்தவரு மேவிடத்
தேர்ந்துதெளி கேள்வியாளன்
கார்மேவி முத்தமிடு கரதலன் கவிவாணர்
கவியிருளை நீக்குவள்ளல்
கருமேவு சேய்களுங் கற்களும் நெக்குறக்
கானரச மிசைகாவலன்
பார்மேவு முடியரச ரெல்லாம் பணிந்திடும்
பாக்கியச் சேதுபதியாம்
பண்புடையன் ராஜரா ஜேசுவரன் நீடூழி
பாரினைக் காக்கவென்றே
நீர்மேவு பூந்தடஞ் சூழ்முகவை நகரினின்
னிருதியின் திக்கிலுறையும்
நீவிபவி ராமிதிரி சூலிவன சங்கரியை
நியமமாய் வாழ்த்துவோமே. (௩)

வேறு.

பொன்னுலவுந் தென்முகவைப் பூபதியை யாண்டருள்செய்
தன்னிதியே யெங்கள்குல நாரணியே—முன்னைவினை
தீர்த்தவன சங்கரியே சீராஜ ராஜனெனும்
பார்த்திபன்சீர் வாழவருள் பண். (4)

பூசுரர்க ளாசிசெயப் பூவேந்தர் முன்றிலுறக்
காசினியை யாண்டிடுமெங் காவலவ—தேசுமிகு
சீராஜ ராஜனெனுந் தேர்வேந்தே செந்தமிழ்தேர்
மாமாநின் வாழ்வோங்கு க. (5)

கார்க்கண்டன் பொன்னடியைக் காதலித்தே காசினியில்
மார்க்கண்சின் போல்விளங்கி வாழ்ந்திடுநற்—சீர்த்திமிகு
மந்திரர்கள் சூழ்முத்து ராமலிங்க மன்னவனே
இந்திரனைப் போல்வாழ்ந் திரு. (6)

வேறு.

மலர்த்தே னூறி யுவட்டெடுத்து
வழியும் வனசப் பொகுட்டுறையும்
மலரோன் முதலாத் தேவரெனும்
வளமார் பைங்கூழ் களைக்கருக்கி
அலர்த்து மகிடா சுரக்களையை
அடியோ டகழ்ந்து மமரரிடர்
அவித்தே யாளுந் திரிபுரையி
னடித்தா மரையை முடிக்கணிவாம்
புலர்த்துஞ் சடில முனிவரரும்
பொற்பார் கற்பின் மடவாரும்
பொருந்து புகழா னிறைமுகவா
புரியைப் புரக்கும் புரவலனும்
நலத்தான் ராஜ ராஜேசன்
நாடாள் சேது பதியினைச்செந்
நளினத் திருவார் மார்பனென
நாளு மகிழ்ந்து காக்க வென்றே. (7)

செந்தா மரையு நறும்புகையுஞ்
சேர்த்து நினையாந் தொழத்தக்க
தெய்வ மெனவே மனமொழிகள்
சேரப் பணிந்து செங்கரும்பே
நந்தார் வயல்சூழ் முகவையின்வாழ்
ராஜேஸ் வரியே நாரணியே
நாடும் பொருளே யென்றென்று
நாளும் நினைபே பாடுதும்பாம்
சந்தார்ந் தொளிருந் தமிழ்வரையுந்-
தனக்கே யிடமாக் கொண்டுலகில்

தபங்குந் தமிழ்ப்பா வலர்மிடிக்குந்
தனிமா மருந்தா யவதரித்துக்
தொந்தார் மலர்த்தேன் சுரும்பினங்கள்
குடித்துக் களிக்கு மாலையணி
குரிசில் முத்து ராமலிங்கக்
கோமா னென்றும் வாழவென்றே. (8)

வேறு.

வல்லொத்த வனமுலைச் சிறுமியர்கள் மயலுற்று
மடலேறி யவசமாகும்
மல்லலம் போதுநிறை மாலையணி தோளினன்
மருவலர்கள் பணிதாளினன்
அல்லொத்த கண்டர்தந் தொண்டர்பணி கொண்டிலகை
யாட்சிபுரி மாட்சியாளன்
அம்புயப் போதிலுறை யம்பொனாள் தங்குதிரு
வகலத்த னுத்தவராசன்
செல்லொத்த கொடையினன் கல்லொத்த திறலினன்
திகழ்முத்து ராமலிங்கச்
சேதுபதி கல்வியு மாயுளுங் கொண்டுபுவி
ஜெபமேவி வாழவென்றே
வில்லொத்த நுதலினர் கூட்டுறவு கொடுமேரு
வில்லியினை வெற்றிகொண்டு
மேவுபுகழ் ராஜரா ஜேசுவரி யம்மையை
விரும்பிப் பணிந்திடுவமே. (9)

வேறு.

குஞ்சரத்தி னெருத்தமிசைக் குலவிவரும் பெரும்பவனிக்
கோலங் கண்ட
வஞ்சியர்கள் மனமுருக்கும் வடிவழகன் முறைதிறம்பா
வாய்மை யாளன்
எஞ்சலிலாச் செல்வமுறு மிறைவன்முத்து ராமலிங்க
மினிதாய் வாழ
மஞ்சிவரும் குழற்கற்றை மாதுரா ஜேஸ்வரியை
வணங்கு வோமே. (10)

ஆகச் செய்யுள் 188.

சேதுசம்ஸ்தானம்

## சிவசாமிசேர்வை பாடியவை.

பூமகளும் நாமகளும் பொற்புடனே ஈண்டியுறை
காமர்தொல் சீர்த்திமிகுங் காவலனே—தோமறுசீர்
மாராஜர் போற்றும் மதப்புலியென் றோங்கிவளர்
சீராஜ மன்னா ஜெயம். (1)

அன்றலர்ந்த வாம்பல்வா யன்றமைந்த சொற்றாங்கும்
நின்றவிழி தான்கருணை நேர்தாங்கும்—துன்றுபுயம்
மண்டலமெ லாந்தாங்கு மன்னுமுத்து ராமலிங்க
கொண்டற்கை தாங்குங் கொடை. (2)

வேறு.

கார்கேட் டுவப்ப ருழவோர்கள் பெற்ற கவின்மகவின்
சீர்கேட் டுவந்திடுந் தாயும் பகைவர் செறிந்துவரும்
போர்கேட் டுவக்குமெஞ் சீராஜ ராஜ புரவலன்றன்
பேர்கேட் டுவக்கும் புலவோர்க ளெஞ்சகம் பேசிடினே. (3)

வேறு.

வண்டிருக்கு மலர்ப்பொழில்சூழ் முகவையிறை யரண்மனைக்கண்
மன்னி வாழுங்
கண்டிருக்கு மதுரமொழிச் சிவகாம சௌந்தரியின்
கமலப் பாதத்
தொண்டிருக்குஞ் சீராஜ ராஜனெங்கள் சேதுபதிச்
சுகுணன் சீர்வெண்
பெண்டிருக்கும் நாவினன்றி மற்றொருநா வாற்புகழ்ந்து
பேசற் பாற்றே. (4)

வேறு.

பொன்னியற் சடில மாணிக்க மலையின்
புறம்வளர் மரகதக் குன்றே
பொங்கிய கொங்கைக் கங்கையர் திருவாள்
போற்றுபொற் கொடிமட மயிலே

அன்னிய புவன மனைத்தையு மீன்றுந்
துலங்கிடு கன்னியா முதல்வி
தொழும்பர்த முளத்தி லூறிட வூறுஞ்
சுவைமிகு தெள்ளிய வமுதே
மன்னிய கருணை நிலயமே தெய்வ
மறைக்குமோர் வஞ்சமார் வெளியே
மடநடை பயிலும் வெள்ளனப் பேடே
மனத்தொடு பணிகுவந் தினமே
பன்னிய நவராத் திரியெனும் விழவிற்
பரந்தெழு கடலென முழங்கும்
பல்பொருள் வேத விதியினிற் போற்றும்
பார்த்திபன் நீடுவாழ் வுறவே. (5)

சீர்கொண்ட திரையுடுத் தொளிர்கின்ற மாதராள் சீதமல வதனமதனிற்
திகழ்பிறைத் துண்டமெனமிளிர்பாலமத்தியிற்சேர்திலகமென்னவளருந்
திருமாது குடிகொண்ட முகவைநக ராதிபன் செங்கதிர்க் குலதீபமார்
செந்தமிழி லிலக்கண மிலக்கிய முணர்ந்தவன் றிடகவி யிலங்கு நாவான்
சிங்காத னதிபதி மங்காத வெழில்கொண்ட சித்ரநவ ரத்ந முடியன்
தென்கோடி யாதிபதி மன்கோடி வந்துபுகழ் செங்கோ னடாத்து மியலன்
சேதுபதி நீதிபதி தென்னர்வட மன்னர்பதி தேவர்பதி யேவல் பலவுஞ்
செய்தபதி கைபுனைந் திடவிடு விமானமேற் றிகழ்கின்ற தேவ தேவன்
சிதாஜித சபையினட மிடுவிமல கமலபத சேகரன் றுதகியொடுந்
திங்களணி செஞ்சடில சங்கரர் சுதந்திரர் திகம்பரர் த்ரியம்பகர் பெருந்
தேசிவரி மாசல குமாரிசுகு மாரமுலை சேர்புனித தேவைநகர்வாழ்
சிவபரஞ் சுடரான ராமலிங் கேசனடி தினமும் பராவுபுனிதன்
தீரப்ர சண்டகோ தண்டரகு ராமனிரு திவ்யசரணத்தியானன்
செழுமறை யியம்புமுதல் மரபினர்க் குற்றுதவு சீர்த்திமிகு போஜ ராஜன்
திக்குவிஜயஞ்செய்திவ் வுலகெலாந் திறைகொண்ட தீரபாற் கரவேந்தனுஞ்
சேதுபதி செய்தபூ ஜாபலத் தான்முதற் செல்வனா வந்துதித்தோன்

தார்கொண்டமுல்லையணிமார்பினனீர்கொண்டதண்முகிலின்வண்மைகற்று
சத்யவான் புத்திமான் தர்மவா னென்றுமுறை சாம்ராச்ய லக்ஷ்மீகரன் [ன்
சகலகலை யுங்கற்ற கல்விமான் செல்வவான் சற்குண விவேகி பூர்ண
சந்த்ரவத னேந்திரன் சுந்தர மிகுந்திலகு தாமரச தளநேத்திரன்

தளவத்தி லுற்றமுகை தாளத்தை யொத்தநகை சபரத்தை யொத்த விழியார்
சலசத்தையொத்தபுதமமிர்தத்தையொத்தினிமைதருதத்தையொத்தமொழியார்
தளர்வுற் றிருக்குமிடை தளிரொத் திருக்குமியல் சலபுற்புதத்தின்முலையார்
தகைபெற்றி ருக்குமுயர் குகனைப் பெனத்தழுவு சர்சத்து வக்குமெழிலான்
தாணிக்கு ணித்தியமு நிறைவுற் றிருக்குமதி தனையொத் தழற்சி யிலதாய்ச்
சகலர்க்குமொத்தபெருகிழலுய்த்தளிக்குமொளிர்தாளத்தியற்றுகுடையான்
சமரத் தெதிர்த்தபுலி திசையிற் புகப்பொருது சயமுற்ற பெற்ற முதவுஞ்
சருமத் தியற்றி யெழு முகிலிற் றொனிக்குமொலி தழுவுற்ற வெற்றிமுரசான்
தவளக் களிற்றி னிறைவர்க்கு மிக்க தருகற்ப கக்கரதலன்
சலசிந்து வின்க ணுறைகின்ற லங்கை தனின்முன்பு சென்று பகையோர்
தலைசிந்த வென்ற வனுமன் பயின்ற தகைவென்றி நின்ற துவசன்
சபைமெச்சு வித்வசனர் சங்கீத விற்பன்னர் தங்கிநிறை திருமுன்றிலான்
ார்கொண்ட மும்மதக் கவளமால் யானையான் கதிகொண்ட வெண்புரவியான்
சகனத் துலாவிவரு கொடியுற்ற தேரினன் கடலொத் தெழுந்தானையான்
கனகவட மேருப்பு யாசல னடங்காத கண்டகர்க் கிடியேறனன்
கச்சணி முலைச்சியர் படைக்கட விடைக்குலவு கந்தர்ப்ப வேளையனையான்
கௌரிதிரி சூலதரி நாரணி புராதனி காளிவன மாலி துணைவி
கன்னிபயி ரவிநீலி கட்கவர சக்ரதரி கௌமாரி காத்யாயனி
கஞ்சுக பயோதரி யிலங்கு மேகலைகொண்ட கனருசி மருங்கு லாளெங்
காளிகா ரணிமாரி யையைவன சங்கரி கனகச் சிலம்ப லம்பும்
கமலபத ராஜரா ஜேஸ்வரியை யனுதினங் கருணையொடு பரவு முசிதன்
கல்வியறி வாணர்க்கு மறைவாண ருக்குமே கருதிய வினைத்து மீந்தே
காசினியெ லாம்புகழ் ராஜரா ஜேசனுங் காவலா புவிபுரக்குங்
காவல ரநேகருண் டவர்கடம் பொருளொருவர் கவராது காத்திருக்குங்
காவலர்க ளன்றிநின் போலறம் புகழ்கொண்ட காவலர்க ளில்லைமேலாங்
கல்வியின் றிறனறித னன்முக மலர்ச்சிமுன் காணுதற் கினிய ஞநல்
கடவுளர் பெரும்பூசை புரிதன்முத லிவையெலாங் கலியுகத் தரிது நின்பாற்
காணலாங் கொடைவீர முற்றநின் போற்பெருங் காமதே னுவுநல்குமோ
ர்கொண்ட செம்பொன்முடி யபயனுஞ் செழியருக் கரசனும் வஞ்சிவேந்தும்
ஆண்டகா டனதுநா டவர்கள்செங் கோலுமுன தவர்கண்முத் தமிழு முனதே
ஆதியிற்றமிழ்க்கொடிக்கொழுகொம்புநீயென்னவரைகுவதுமுண்மையாமே
அடுபெருவ முன்னறிந் தேபெய லழிக்குமோ ராற்றலுண் டோமுகிற்கும்
அடைந்தவர்விருப்பறிந்தீத்துவக்கும்பெருமையைந்தருவவைக்குமுண்டோ
அலையெறி பயோததி யுடைத்தவர்க் கல்லாம லமுதீவ தில்லையென்ப
ரவைபோல வன்றுநின் வேளாண்மை தண்டா தளிக்கின்ற பேராண்மையால்
ஆதியிற் குந்திதரு மைந்தனு மிரந்தோர்க் களிக்குமிடை வள்ளலானன்

அலர்முல்லை தடைசெயத் தோளித் தோன்மயிற் காடைதந் தோனுநிகரான்
அணிவரைபி னெல்லியங் கனியையெளவைக்கீந்த வதிகமா னதிகனல்லன்
அந்திமான் சந்திமா னிவர்கள்வெங் கானகத் தடையுமா றெப்பதன்றி
அருமானைவிழவெய்தபெருமானையொத்தநினையன்னகொடையாளரெவர்கான்
அறனுற்ற நின்கீர்த்தி நிறைவுற்றிவ் வுலகெலா மமரருறை கின்ற வானில்
அண்மியே நறவொழுகு விரைகமழு மைந்தருவை யலர் தூற்றிடச் செய்திடும்
ஐயனே மார்க்கண்ட வயதுமிரு நிதியுமுட னலகில்பல வூழி காறும்
அவனியதி னலமென்ப யாவையும் பெற்றுநீ அழகுடன் வாழி தானே.

ஆகச் செய்யுள் 194.

---

சேதுசம்ஸ்தானம்

## கணபதிசேர்வை பாடியவை.

பார்பூத்த பல்வளமும் பாவுமுக வைப்பதிவாழ்
பதியாக் கொண்ட
ஏர்பூத்த மறைப்பொருளாம் ராஜரா ஜேசுவரி
யிணைத்தாள் போற்றிக்
கார்பூத்த கற்பகம்போற் கவிபூத்த நாவுடையார்
கட்கிங் கியுஞ்
சீர்பூத்த ராஜரா ஜேசுவர மன்னவநீ
சிறக்க மாதோ. (1)

வேறு.

நீதி பதியாய் நெடுநீர் நிலம்புரக்கும்
சேதுபதி யேராஜ சிங்கமே—மாதுபதி
தன்னருளா லென்றுந் தருநீழ லிந்திரன்போல்
மன்னவநீ வாழி மகிழ்ந்து. (2)

வேறு.

தண்ணிலவு பொழிகவிகைத் தார்வேந்தன் தருமநெறி
தவறு தேந்தன்
கண்ணிலவு கருமணிபோற் காசினியெல் லாங்காக்குங்
கருணைவேந்தன்
பண்ணிலவு சிராஜ ராஜதுரை யாம்வேந்தைப்
பாது காப்பாய்
உண்ணிலவும் அடியவர்க ளுன்னிடம்பே றைக்கொடுக்கு
முமைமா தாவே. (3)

வில்லாரு மணிமாட வீதிபுடை சூழ்முகவை
    வேந்தர் வேந்தன்
பல்லாருங் கொண்டாடப் பலகலைதேர் பாற்கரவேள்
    பயந்த மைந்தன்
மல்லாரும் பொற்புயத்துச் சிராஜ ராஜனையே
    மகிழ்ந்து காப்பாய்
செல்லாருங் கரியகுழ லங்கயற்கட் பசுங்கொடியே
    செகமா தாவே. (4)

வேறு.

கண்ணுக் கினிய கனியைக் கவியாளர்
பண்ணுக் கிசைபெயர்பூண் பார்த்திபனை—கண்ணுகொடைச்
சிராஜ ராஜ சிகாமணியைக் காத்தருள்வாய்
மாராஜ ராஜேஸ் வரி. (5)

வேறு.

மாமேவு செங்கமல மங்கையுறை திருமார்பன்
    மன்னர்முடி வருடுதாளன்
மாராஜ ராஜனுஞ் சிராஜ ராஜதுரை
    மணிமகுட மணிசென்னியான்
பாமேவு மெய்ப்புலவர் கவிபிருட் கோர்பழைப
    பாநுகுல மதனுள்வந்தோன்
பாண்டியன் பாற்கரன் பண்ணிய தவத்தினற்
    பயனா யுதித்தவள்ளல்
பூமேவு பொங்கர்புடை சூழ்முகவை யாதிபதி
    பொன்னாட்டு வேந்தனைப்போற்
பூதலத் துயிர்களுக் கின்பஞ்செய் தெந்நாளும்
    பூரித்து வாழவருள்வாய்
சேமேவு நடராஜ னிடமேவு வல்லியே
    சேதுபதி பரன்மனைபிலார்
செல்வியே ராஜரா ஜேசுவரி யம்மையே
    செகமெலாம் போற்றுமுமையே. (6)

வேறு.

தேனார்க்கும் பொழில்புடைசூழ் தென்முகவைப் பதிவாழுந்
தேவே யெங்கள்
மானார்க்குங் காதலத்தா னிடமிருக்கு முமையவளே
மகிழ்ந்து காப்பாய்
கானார்க்கும் மலர்த்தொடையற் காவலனைப் பாநுகுலக்
கருவூலத்தை
வானார்க்கும் வேற்கரனை ராஜராஜேஸ்வரனை
யூழி நன்றே. (7)

நீராருஞ் சடைப்பரம னிடமிருக்கு முமையருளால்
நெடுநீர் சூழ்ந்த
பாராளுந் தேர்வேந்தே பண்ணியபுண் ணியசேது
பதியா மாலே
காராருங் கற்பகத்தைக் கருணையினால் வெற்றிகொளுங்
கன்னா தென்னா
சீராளா ராஜராஜேச்சுவரா நின்பெருஞ்சீர்
சிறக்க நன்றே. (8)

வேறு.

தேவிற் சிறந்த திருமால்போற் காசினியைக்
காவிக் குடையதனுட் காப்பவனே—பூவினுறை
பொன்னாரும் பொற்புயத்துப் பூபமுத்து ராமலிங்கத்
தென்னா வுனக்கே ஜெயம். (9)

ஆகச் செய்யுள் 203.

---

இராமநாதபுரம்

## கோ. ம. சுந்தரஞ் செட்டியார் பாடியவை.

பாட்டுக் கிசைந்த விசையாளன் பூபதி பாற்கரன்றன்
வேட்டுக் கொளுந்தவத் தெய்திநின் றனற மேயசெம்பி
நாட்டுக் கரசன் புகழ்ராஜ ராஜ நரேந்திரற்குக்
கோட்டுக் கவரிவென் றுபருள் வாயிதங் கொண்டுவந்தே. (1)

### வேறு.

தேவ தேவன் மனத்துறை செல்வியே
நாவ லன்புகழ் ராஜரா ஜேஸ்வரன்
காவ லன்னிசை யாளன் கருத்துளுந்
தாவி லாவரந் தந்தருள் செய்வையே. (2)

### வேறு.

பூவுலகம் போற்றும் புரந்தரனார் நேர்முகவைக்
காவலர்தங் கோவிலுறுங் கண்மணியே—தேவியருள்
சிந்தா மணிநிகருஞ் சிராஜ ராஜனிதி
சந்தானம் வாழ்வுபெறத் தந்து. (3)

மானேய்கண் மாதரியே மாமகிடன் றன்னைவெலுந்
தேனேமா ராஜகுல தெய்வமே—ஆனையும்
அஞ்சாடுந் தேவி யருள்ராஜ ராஜனையாள்
பஞ்சான னத்திவரம் பா. (4)

மாமுகவை யாநகராள் வண்புனித சேதுபதி
தாமமணி திண்டோட் சயதுங்கன்—யாமகிழும்
சங்கீதங் கற்றுணர்ந்த தத்துவற்குத் தற்பரைநீ
இங்கிதந்தந் தாள வெழு. (5)

### வேறு.

தந்தம் படைத்த மதகளிற் றன்சேதுத் தனிப்புனலன்
இந்தம் படைத்த சடையாளர் வாமத் திருந்திலகுஞ்
சௌந்தம் படைத்த திரிபுரைநின்பதத் தாமலரேய்
கந்தம் படைத்த சிராஜ ராஜனைக் காத்தருளே. (6)

செய்ய பெரும்புகழ்ப் பாற்கர பூபதி செய்தவஞ்சேர்
மெய்யன் கருணைக் கடலனை யான்றிங்கள் வேணியணி
துய்யன் சிவனைத் தொழுராஜ ராஜ சுகுணனைக்கா
வய்யம் பராவு திரிபுர சுந்தரி மாதரியே. (7)

ஆகச் செய்யுள் 210.

## சேதுசம்ஸ்தானம் பிரமாதிச௵ மஹாநவராத்திரி வாழ்த்துக்கவிகள்.

மேலைப்புத்தனேரி

### சிதம்பரபுன்னைவனநாதமுதலியார் பாடியவை.

பூம்பதி சேது பதிராஜ பூபதி புண்பகுண
னும்பதி யாமுத்து ராமலிங் காதிப னுர்ந்தசுவைத்
தேம்பதி முத்தமிழ் வாணரின் பேர்மிடி தீர்த்தருள்வோன்
ஆம்பெருஞ் செல்வமுங் கல்வியும் பெற்றுல காளுகவே. (1)

வேறு,

கற்றைவார் சடையன் கண்ணுதற் கடவுள்
கழலிணை யன்புடன் போற்று
நற்றவப் பேற்று ளனிலம் புரந்த
நலமிகு பாற்கரக் கோமான்
பெற்றசீர்ப் புதல்வன் ராஜரா ஜேஸன்
பிறக்குபல் லாயுணன் னலங்கள்
உற்றிவ ணிலத்தை யொருதனி புரக்க
வுமைதிரி புரையரு ளுவந்தே. (2)

வேறு.

ஏரா ரியயா சலன்புதல்வி யேற்றவர்க்குக்
காரார் கொடையாற் கவிதீர்ப்போன்—பாராளு
மாராஜ ராஜன் மகிழ்ச்சி மிகவெய்திச்
சீராக வாழவருள் செய். (3)

ஆகச் செய்யுள் 213.

---

முற்றிற்று.